
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

பிப்ரவரி - 2003
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



அன்பே சிவம்: சி.பி.எம்-இன் திரை அவதாரம்



# பார்ப்பன பயங்கரவாதம்

படிப்பகம்

www.padippakam.com



# பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு

## கருத்தரங்கம்

22.2.03 சனி
காலை 10 மணி முதல்
மாலை 6 மணி வரை

தலைமை:
தோழர் கதிரவன்,
மாநிலச் செயற்குழு உறுப்பினர்,
ம.க.இ.க.

முதன்மையுரை:
தோழர் மருதையன்,
பொதுச் செயலர், ம.க. இ.க

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை இந்துத்துவம் விழுங்கியது எப்படி?
- குஜராத் அளிக்கும் படிப்பினை.
பேரா. ராம் புனியானி
ஐ.ஐ.டி. மும்பை.

சிறு தெய்வ வழிபாட்டின் பார்ப்பனமயமாக்கம்
திரு. சிவக்குமரன்,
பாளையங்கோட்டை.

நீதித்துறை இந்துத்துவமயமானால்...
தோழர் பி. திருமலைராசன்,
செயலர், கீழமை நீதிமன்றங்களின் வழக்குரைஞர் சங்கக் கூட்டமைப்பு, தமிழ்நாடு.

இசுலாமிய மக்களும் இசுலாமிய பயங்கரவாதமும்
- அவதூறுகளும் உண்மையும்
திரு. அஸ்கார் அலி எஞ்சினீயர்,
மும்பை.

இந்தியத் தத்துவ மரபு, இந்து தத்துவ மரபில்லை
இல்லை... இல்லவே இல்லை!
பேரா. பெரியார்தாசன்,
சென்னை.

23.2.03 ஞாயிறு
காலை 10 மணி முதல்
மாலை 6 மணி வரை

தலைமை:
தோழர் சுப. தங்கராசு,
பொதுச் செயலர், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி.

தலித் மக்களும் மதமாற்றமும்:
தமிழகத்தில் மதமாற்றத்தின் வரலாறு
தோழர் ஆ. சிவசுப்பிரமணியன்,
தூத்துக்குடி.

அரசு எந்திரத்திற்கு
இந்து மதவெறி பிடித்தபோது...

குஜராத் இனப்படுகொலையின் குற்றவாளிகள்!
நீதிபதி ஆஸ்பெட் சுரேஷ்,
ஓய்வு பெற்ற நீதிபதி, பம்பாய் உயர்நீதிமன்றம்.

தேசபக்த வேடம் போடும் தேசத் துரோகிகள்!
பேரா. சம்சுல் இசுலாம்,
தில்லி பல்கலைக் கழகம்.

இந்திய அரசமைப்பு மதச்சார்பற்றதா?
தோழர் பி.ஆர். குப்புசாமி
வழக்குரைஞர், கரூர்.

இந்து மதவெறியின் ஆயுதமாகப் பேனா!
தீஸ்தா சேதல்வாத்,
ஆசிரியர், "கம்யூனலிசம் காம்பாட்" (மதவெறிக்கெதிராகப் போராடு)

மறுகாலனியாதிக்கப் பயங்கரவாதமும்
மனுதரும பயங்கரவாதமும்
முனைவர் ஆனந்த் தெல்தும்டே,
மும்பை

மாநாட்டுத் தீர்மானங்கள்,
நிறைவுரை:
தோழர் காளியப்பன்,
இணைச் செயலர், ம.க.இ.க.

## கலை நிகழ்ச்சிகள்

இரு நாட்களிலும்
மாலை 7 மணி முதல்

பார்ப்பனியத்துக்குப் பாடை கட்டிச் சங்கு ஊதிச் சாவு மேளம் அடித்து கலைநிகழ்ச்சிகள் தொடங்கும்.

தப்பாட்டம்
வீரசோழ தப்பாட்டக் குழு,
ரெட்டிப் பாளையம், தஞ்சை.

மகுடாட்டம்
செ. முத்துராமலிங்கம்,
சு. ஆத்திமுத்து குழுவினர்,
சிறீ வைகுண்டம்.

ஜிக்காட்டம்
அலையோசை ஜிக்காட்டக் குழு,
உடுமலை வட்டம்.

தமிழ்த் தொல் இசைக் குழுவினரின் இடிமுழக்கம்
சிவபூதகணநாதர் இசைக் குழு,
புதுவை.

சிறுவர்கள் இசைநிகழ்ச்சி

குறவன் குறத்தி ஆட்டம்
சங்கராச்சாரி ஓட்டம்
திரு. முருகதாஸ்,
திரு. பெரியண்ணன் குழுவினர்,
மதுரை.

போகாதே நந்தா போகாதே - நாடகம்
ஒத்திகை நாடகக் குழு,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

தமிழ்த் தீட்டு -
வில்லிசைப் பாடல்
ஆத்தூர் கோமதி குழுவினர்

அடிமாடு - நாடகம்
நாடகக் குழு, வி.வி.மு., கம்பம்.

லுங்கி - நாடகம்
நாடகக் குழு, வி.வி.மு., கம்பம்.

சாம்பான் நாடகம்
ஒத்திகை நாடகக் குழு,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

புரட்சிகரப் பாடல்கள்
தோழர் கத்தார் குழுவினர்,
ஜனநாட்டிய மண்டலி, ஆந்திரம்.

புரட்சிகரக் கலைநிகழ்ச்சி
மையக் கலைக் குழு, ம.க.இ.க.,
தமிழ்நாடு.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

• போர்: 20
• குரல்: 7 - 9
• பிப்ரவரி - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-23718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# மெரினா அழகாகத்தானே இருக்கிறது....

சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தப் போகிறார்களாம். எப்படி என்கிற கேள்விக்கான விடை யாருக்காக என்கிற கேள்வியை உடனடியாக எழுப்பி விடுகிறது. பதில்கள் அழகு என்பது நிச்சயம் வர்க்க சார்புடையதுதான் என்பதற்கான இன்னுமொரு நிரூபணமாகின்றன. இன்றைய மெரினாக் காட்சிகள் எவை? அதிகாலை விரிந்து கிடக்கும் நீலக்கடலும் வானும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தொட்டுக் கொள்ளுகின்றன. கதிரவன் இரத்தச் சிவப்பாய் உதிக்கும்போதே சிறுசிறு கரும்புள்ளிகள் தெரிகின்றன. நேரம் செல்லச் செல்ல அந்தக் கரும்புள்ளிகள் பெரிதாகி கட்டுமரங்களாகிக் கரையை நெருங்கும் காட்சி விரிகிறது. ஒவ்வொரு கட்டுமரத்திலும் மூன்றோ, நான்கோ மீனவர்கள். ஒரு பாடலுக்குரிய தாளம் போல துடுப்பு வலிக்கிறார்கள். அவர்கள் நேற்றோ, முந்தின நாளோ கட்டுச் சோறு கட்டிக்கொண்டு, உயிரைப் பணயம் வைத்துக் கடலுக்குச் சென்றவர்கள், சுட்டெரிக்கும் வெய்யிலிலும் கொட்டி நடுக்கும் பனியிலும் பாடுபட்டு உழைத்த செல்வத்தோடு இதோ அவர்கள் கரைக்குத் திரும்புகிறார்கள்.

இதோ, கரையில் அவர்களின் சிறு பிள்ளைகளும், மனைவிமார்களும், வயோதிகப் பெற்றோர்களும் ஆவலுடன் காத்துக் கிடக்கிறார்கள். இவர்களும் அங்கே கரையை நெருங்குபவர்களும் சினிமாவில் காட்டப்படும் அழகு மனிதர்கள் அல்ல. பழச்சாறும், நட்சத்திரவிடுதி உணவும் தின்று, குளுகுளு அறைகளில் சொகுசாக வாழும் மினுமினுக்கும் வெளுத்த தோலும், பிதுங்கிவழியும் சதையும் அவர்களுக்கில்லை. காய்ந்து கருகிய தோலும், உழைத்து முறுக்கேறிய கரங்களும், ஒட்டிய வயிறுமாக இருக்கிறார்கள். தாம் ஈட்டிய செல்வத்தை அவர்கள் கரையின் மணலிலேயே கொட்ட, உறவினர்களும் வியாபாரிகளும் சூழ்ந்து கொள்கிறார்கள். அன்றைய உணவுக்கான மீன்களைப் பொறுக்கிக் கொண்டு பெண்கள் நகர, கிடைத்த விலைக்கு மீன்களை விற்று விட்டு வலைக்கு வாடகையும் கடனுக்கு வட்டியும் கட்டுவதற்குப் புறப்படுகிறான் அந்த உழைப்பாளி. அன்று அவர்கள் முகத்தில் காணும் கலவையான உணர்வுகளை எந்தக் கலைஞனால்தான் முழுமையாக சித்தரிக்க முடியும்? மாலையில் சற்றே மாறுபட்ட கலவையான உணர்வுகளைக் கொண்ட மனிதர்கள் திரளுவதைக் காண்கிறோம். அங்கே கூடுபவர்கள் எல்லாம் உல்லாசத்துக்காக வருவதில்லை. மனப்புழுக்கத்தைப் பகிர்ந்துகொள்ள, உழைத்துக் களைத்தவர்கள் ஓய்வைநாட, சமூகத் தளைகளால் கட்டுண்ட காதலர்கள் உணர்வுகளைப் பறிமாறிக் கொள்ள, மிகவும் குறைந்த செலவில் குடும்பம் குடும்பமாக மகிழ்ந்திருக்க மனிதர்கள் நாடிவருகிறார்கள். கடல் நீரில் காலை நனைத்து மகிழ்ச்சிகொப்பளிக்கும் உள்ளங்களைக் காண்கிறோம்.

இத்தனை அழகுக்கும் மத்தியில் சில அருவறுக்கத்தக்க காட்சிகளும் உண்டு. ஊதிப் பெருத்த மனிதர்கள் பலர் தமது கொழுப்பைக் குறைக்க நாய்களுடன் காரில் வந்திறங்கி அதிகாலையில் நடைப்பயிற்சி செய்கிறார்கள். சமூக விரோதிகளின் கேடுகள் சிலவும் நடக்கின்றன. அப்புறம் அந்தக் கல்லறைகளும், அவற்றில் நடக்கும் பகுத்தறிவற்ற செயல்களும் – தேவையெல்லாம் இவற்றை அகற்றுவதுதான். ஆனால், ஆட்சியாளர்களோ, மலேசிய அரசுடன் – அங்குள்ள பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு 3500 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து மெரினா கடற்கரையை அழகுபடுத்தப் போகிறார்களாம்.

மேட்டுக் குடியினரின் பார்வைக்கு மெரினா கடற்கரையில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட மீனவக்குப்பங்கள் அசிங்கமாகத் தெரிகின்றனவாம். அவற்றை அகற்றி விட வேண்டுமாம். இனி நீர்ச்சறுக்கு விளையாட்டு, மிதக்கும் உல்லாச விடுதிகள், கரையிலோ நட்சத்திரக் கேளிக்கை விளையாட்டு விடுதிகள், வெளிநாட்டுத் தொழிலதிபர்களும் – அரசுதந்திர அதிகாரிகளும் தங்கும் மாளிகைகள், அவர்களின் அலுவலகங்கள் – இவற்றை நிறுவி அழகுபடுத்தப்போகிறார்கள், ஆட்சியாளர்கள். ஒரு கல்லில் பல மாங்காய்கள் அடித்துப் பழக்கப்பட்டவர்கள் அல்லவா. பல ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டங்கள் நிறைவேறும்போது சில ஆயிரம் கோடி ரூபாய்களாவது தேறும், கட்டுமானப் பணிகளில் ஒப்பந்தம் எடுக்கலாம்; கேளிக்கை – உல்லாச விடுதிகளில் பங்குதாரர்கள் – உரிமையாளர்கள் ஆகலாம்; பன்னாட்டு நிறுவனங்களுக்கு மீன் பிடித்தொழிலைத் தாரைவார்ப்பதில் திரைகடல் ஓடாது திரைகடல் விற்று செல்வத்தைக் குவிக்கலாம்.

இலட்சக்கணக்கான மீனவர்குடும்பங்களை வேரோடு பிடுங்கிக் கொண்டு போய் தரையில் விசிறியடிக்கப்படும் மீன்களைப்போல தொலைவில் கொண்டு போய்க் குவிக்கலாம். தலைமுறை தலைமுறையாகக் கடற்கரையில் பிறந்து, கடலிலேயே வாழ்ந்து, அங்கேயே மடிந்துபோன மக்கள் அங்கு வாழ்ந்தார்கள் என்ற சுவடே தெரியாமல் அழிக்கப்படுவர். நெசவாளிகள், விவசாயிகள், கீழ்நிலைப் பணியாளர்கள், இதோ, மீனவர்கள். இப்படி இருளில் தள்ளப்படும் உழைக்கும் மக்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டே போகிறார்கள். ஏழை எளிய மக்களின் வாழ்வைப் பறித்து அவர்களின் துயரத்தில் இன்பம் காணும் குரூர – குறுமதியாளர்களின் ஆட்சியில் வேறென்ன நடக்கும்? ஆனால், உழைத்து உரமேறிய, இயல்பிலேயே போர்க்குணமிக்க மீனவர்களிடமிருந்து மெரினாவை அவ்வளவு எளிதாகப் பறித்துவிட முடியாது. படகோட்டி, மீனவ நண்பனாக வேடங்கட்டியவர், மீனவர்களை வெளியேற்றி மெரினாவை அழகுபடுத்த கொலைகாரன் தேவாரத்தை ஏவினார். மெரினா மணல் மீனவர் இரத்தத்தால் சிவந்து, ஐந்து மீனவர்கள் உயிரை குடித்தது, அந்த ஓநாய். ஆனால் மெரினாவை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. அந்த துணிவும் உறுதியும் தொடரவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன பயங்கரவாதம்



குஜராத்தை இந்துத்துவாவின் பரிசோதனைக் கூடமாக வைத்து நடத்திய சோதனை முயற்சியில் இந்துத்துவாவாதிகள் வெற்றி அடைந்து விட்டனர். அம்மாநில மக்களைப் பிளவுபடுத்தி மத ரீதியாக அணிதிரளச் செய்து இந்து வெறிப் படுகொலைகளை நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற அணுகுமுறையை வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்து விட்டனர்.

மனித இரத்தத்தைச் சுவைத்துவிட்ட மிருகங்கள் மனிதத் தின்னிகளாகி வெறி கொண்டு அலைவதைப் போல நாடுமுழுவதும் குஜராத் பாணியில் இந்துத்துவாவை முன்னிறுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றப் போவதாக ஆர்ப்பரிக்கிறார்கள், இந்துத்துவாவாதிகள்.

இந்துத்துவாவின் நாடாளுமன்ற எதிர்த்தரப்போ கையறு நிலையில் செய்வதறியாது திகைத்து நிற்கின்றது. இந்துத்துவாவாதிகளின் முன்னோக்கிய பாய்ச்சலைத் தடுத்து நிறுத்தும் வழி வகை அறியாது இருட்டில் அலையும் குருட்டுப் பூனை போன்று திணறுகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற பாசிச எதிர்ப்புப் போராளி ஜார்ஜ் திமித்ரோவ் ஜெர்மன் பாசிசம் பற்றி எழுப்பிய கேள்விகளையும் தீர்வுகளையும் நினைவில் கொள்வது அவசியம். பாசிசம் ஆட்சிக்கு வருவது தடுக்க முடியாதா? பாசிசம் ஆட்சிக்கு வருவது எவ்வாறு சாத்தியமாகியது? அது ஆட்சிக்கு வருவதற்குச் சாதகமாக இருந்த காரணங்கள்–சக்திகள் எவை? பாசிசம் வீழ்த்தப்பட முடியாததா? அதை வீழ்த்துவது எப்படி? என்பது போன்ற கேள்விகளை திமித்ரோவ் எழுப்பினர்.

முதலில் பாசிசச் சக்திகளையும், பாசிச ஆட்சி குறித்தும் சமூக ஜனநாயகக் கட்சி – போலி சோசலிச திருத்தல்வாதக் கட்சிகள் குறைமதிப்பீடு செய்திருந்தன, பின்னர் பாசிசத்தின் வளர்ச்சியையும் பலத்தையும் கண்டு மிரண்டு போயின, இதனால் எதிர்த்து வீழ்த்த முடியும் என்கிற துணிவும் நம்பிக்கையும் பெறத் தவறின. இறுதியில் இந்த அவநம்பிக்கை கோழைத்தனம் காரணமாக பாசிசத்துடன் சமரசம் செய்து கொண்டன. இவைதான், பாசிசம் ஆட்சிக்கு வருவதைச் சாத்தியமாக்கிய, சாதகமாக்கிய காரணங்கள்.

இந்தப் படிப்பினைகள் இன்றைய நிலைமையில் நமது நாட்டுக்கும் பொருந்தும். இந்துத்துவாவாதிகள் குறித்த அவர்களின் நாடாளுமன்ற அரசியல் எதிர்த்தரப்பினர் மதச்சார்பற்றவர்கள் என்று கூறிக்கொள்ளும் காங்கிரசு, போலி கம்யூனிஸ்டுகளின், போலி சோசலிஸ்டுகள், திராவிட இயக்கம் வழிவந்த கட்சிகள் ஆகியவை மேற்கொள்ளும் மதிப்பீடு மற்றும் அணுகுமுறைகள்தாம் தற்போது அவர்கள் நாடாளுமன்றப் பெரும்பான்மைச் சக்தியைப் பெறுவதற்கும் அப்பட்டமான பயங்கரவாத பாசிச ஆட்சியை நிறுவுவதற்கும் வசதியாக அமைந்துள்ளன.

இந்துத்துவா என்பதற்கு ஆர்.எஸ்.எஸ். முகாமில் இருந்து இரண்டு விதமான விளக்கங்கள் தரப்படுகின்றன. நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பா.ஜ.க.வும் அதன் மக்கள் திரள் அமைப்புகளும் ''இந்துத்துவா என்பது எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் பரந்தமனப்பான்மையும், எம்மதமும் சம்மதம் என்கிற மதச்சார்பற்ற தன்மையும் கொண்ட 'சர்வதர்ம சமபாவ' என்ற கொள்கையைக் குறிக்கும் என்கின்றன.

ஆனால், ஆர்.எஸ்.எஸ்., வி.இ.ப., பஜ்ரங்தள் மற்றும் சிவசேனா முதலிய அப்பட்டமான பாசிச மதவெறி அமைப்புகளைப் பொறுத்தவரை இந்துத்துவா என்பது சர்வதர்ம சமபாவ கிடையாது; ''சனாதன தர்மம்தான்'' இந்துத்துவா. ''சனாதன தர்மம்'' என்பது வருணாசிரம – சாதிய சமூக நியதிகளைக் கொண்ட பார்ப்பனியம் என்பதைத் தவிர வேறில்லை. ஆர்.எஸ்.எஸ்-இன் மூலவர்களான ஹெட்கேவார், கோல் வால்கர் முதல் அதன் இன்றைய அதிபதியான சுதர்சன் வரை அனைவரும் இதைப் பட்டவர்த்தனமாகப் பிரகடனம் செய்துள்ளனர்.

உண்மையில் மிகச் சரியாகவும் கறாராகவும் கூறுவதானால் ஆர்.எஸ்.எஸ். குடும்ப அமைப்புகளால் தலைமையேற்று அமலாக்கப்படும் ''இந்துத்துவம்'' என்பது பார்ப்பன பாசிச பயங்கரவாதம் ஆகும். ஆர்.எஸ்.எஸ் குடும்பத்தால் முன்னிறுத்தப்படும் வெவ்வேறு தலைவர்கள் இடத்தையும் காலத்தையும் பொறுத்து வெவ்வேறு விதமாக அதை அமலாக்குகிறார்கள்.

அத்வானி – வாஜ்பாய் – முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் ஒருவிதமாகவும், நரேந்திர மோடி - பிரவீண் தொக்காடியா – வினய் கத்தியார் – அசோக் சிங்கால் வேறுவிதமாகவும், சங்கராச்சாரிகள் – பீடாதிபதிகள் – பரமஹம்ஸ் போன்ற சாமியார்கள் இன்னொருவிதமாகவும், பால் தாக்கரே – ஜெயலலிதா போன்ற அதன் கூட்டாளிகள் பிறிதொரு விதமாகவும் பார்ப்பன பாசிச பயங்கரவாதத்தை வெளிப்படுத்துகின்றனர்.

தங்களைப் பகுத்தறிவுவாதிகள், மதச்சார்பற்றவர்கள் என்று கூறிக்கொள்ளும் போலி சோசலிஸ்டுகளும், தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. முதலிய திராவிட தமிழினப் பாரம்பரிய உரிமை பாராட்டும் கட்சிகளும் தமது பிழைப்புவாத, காரியவாத நோக்கம் காரணமாக பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை ஒரு மதவாத சக்தியாகக் கூடக் கருதவில்லை. மாறாக அதனுடன் சமரசம் செய்து கொண்டு சரணடைந்து விட்டதோடு பார்ப்பன பாசிச பயங்கரவாதத்துடன் நம்பகமான விசுவாசமான கூட்டாளிகளாக மாறிவிட்டனர். அதன் பயங்கரவாதச் செயல்களை நியாயப்படுத்தும், சமூக ஆதரவு தேடித்தரும் வேலைகளையும் செய்கின்றனர்.

மனுவாதத்தின் தீவிர எதிர்ப்பாளர்கள் என்று கூறிக் கொண்ட பகுஜன் சமாஜ் கட்சி, ராம்விலாஸ் பாஸ்வான் போன்ற தலித் இயக்கத்தவர்கள் கூட பிழைப்புவாத, அரசியல் ஆதாயம் கருதி வாய்ப்பு கிடைக்கும்போது பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்து கொள்கின்றனர். கூட்டணியில் இருக்கும்போது குஜராத் படுகொலை,



படிப்பகம்

www.padippakam.com

அயோத்தி யாபர் மசூதி இடிப்பு போன்ற அதன் பயங்கரவாதச் செல்களுக்கு நியாயம் கற்பிப்பதும், கூட்டணியில் இல்லாத போது மனுவாத எதிர்ப்பு, மதச் சார்பற்ற சக்திகளாகக் காட்டிக் கொள்வதுமாக இருக்கின்றனர்.

நாட்டிலேயே இரண்டாவது பெரிய அரசியல் கட்சி, தன்னை ஒரு மதச்சார்பற்ற சக்தி என்று கூறிக்கொள்ளும் காங்கிரசு, பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தை ஒரு வகுப்புவாத சக்தி என்று கருதுகிறது. அதை ஒரு மதவெறி சக்தியாகக் கூட கருதவில்லை; தேர்தல் ஆதாயத்துக்காக மத ரீதியில் மக்களைப் பிளவுபடுத்தும் சக்தியாகக் கருதுகிறது. மதவெறிப் படுகொலைகள் நடக்கும்போது அவை பாசிசத் தன்மையில் இருப்பதாக சிலசமயம் கண்டிக்கிறது.

பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ் கும்பலைப் போலவே காங்கிரசும் பார்ப்பன – பனியா சாதிய நலன்களைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. காங்கிரசுக் கட்சியும் அதன் நிறுவன காலத்திலிருந்து மிதவாத இந்துத்துவா கட்சியாகவே இருந்து வந்திருக்கிறது. காங்கிரசு மத்திய – மாநில ஆட்சிகளை நடத்திக் கொண்டிருந்தபோது கூட ஆர்.எஸ்.எஸ் கும்பல் நடத்திய மதவெறிப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவோ, அவற்றை நடத்திய குற்றவாளிகளைத் தண்டிக்கவோ உரிய நடவடிக்கை எடுத்ததில்லை.

அரசியல் ரீதியில் பா.ஜ.க எதிர்ப்புக் கட்சியாக இருந்தபோது ஆர்.எஸ்.எஸ் – இன் ஆதரவைப் பெறவும், தன்னை ஒரு இந்துமதம் சார்ந்த இயக்கமாக காட்டிக் கொண்டும் காங்கிரசு செயல்பட்டு வந்திருக்கிறது. அயோத்தி பாபர் மசூதிக்குள் ராமன் சிலையை நிறுவுவது, நீதிமன்ற உத்தரவுப்படி பூட்டிச் சீல் வைக்கப்பட்டிருந்த மசூதியை இந்துக்கள் வழிபடுவதற்குத் திறந்துவிடுவது, இராமன் கோவில் கட்டுவதற்கான பூமி பூசை, செங்கல் பூசை, யாகங்கள் நடத்துவது, கடைசியாக பாபர் மசூதியை இடித்துத் தற்காலிக ராமன் கோவில் கட்டுவது வரை ஆர்.எஸ்.எஸ் கும்பலின் பயங்கரவாதச் செயல்களுக்கெல்லாம் உடந்தையாகக் காங்கிரசு இருந்திருக்கிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலிருந்தே, ஆர்.எஸ்.எஸ் ஒரு வலுவான இயக்கமாக உருவாவதற்கு முன்பிருந்தே இந்து – இந்தி – இந்தியா என்ற கொள்கையைக் காங்கிரசு அமலாக்கி வந்திருக்கிறது. காங்கிரசுக் கட்சியின் தலைவர்கள் உட்பட அதன் அமைப்பு நிர்வாகிகள், மாநில முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள், பிரதமர் – அரசுத் தலைவர் – மேல்நிலை நீதிமன்றத் தலைமை நீதிபதிகள், முப்படைத் தலைமைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் ஆகிய முக்கியப் பொறுப்புகளைப் பார்ப்பனர்களே பெரும்பாலும் கைப்பற்றிக் கொண்டிருந்தனர். இப்படிப் பட்ட காங்கிரசு ஆர்.எஸ்.எஸ் கும்பலின் இந்துத்துவா என்பது பார்ப்பன பாசிச பயங்கரவாதம்தான் என்று கறாரான வரையறுப்பை முன்வைத்துப் போராடும் என்று எதிர்பார்க்க முடியுமா?

ஆனால், இரண்டு போலி கம்யூனிஸ்டுகளும் அப்படித்தான் எதிர்பார்க்கின்றன. காங்கிரசுக் கட்சியும் ஜெயலலிதா கட்சியும் அடிப்படையில் மதச்சார்பற்ற கட்சிகள்; உலகமயம் – தனியார்மயம் – தாராளமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையில் மட்டும்தான் இவை பா.ஜ.க வின் கொள்கையுடன் ஒத்துப் போகின்றன. எனவே, இக்கட்சிகளை மதச்சார்பற்ற அணியில் சேர்ப்பதுடன், நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான காங்கிரசின் தலைமையில் அந்த அணி அமைந்திட வேண்டும் என்று விரும்புகின்றன. அதோடு இக்கட்சிகள் புதிய பொருளாதாரக் கொள்கையை ஆதரிப்பதை நிறுத்த வேண்டுமென்றும், பா.ஜ.கவை உறுதியுடன் எதிர்க்கவும் வேண்டும் என்று விரும்புகின்றன. இப்போது பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளையும் தேசிய ஜனநாயக முன்னணியில் இருந்து விலகி மதச்சார்பற்ற அணியில் சேரும்படி போலி கம்யூனிஸ்டுகள் கோருகின்றனர்.

பா.ஜ.க – ஆர்.எஸ்.எஸ் கும்பல் மீது பிற அரசியல் கட்சிகள் கொண்டுள்ள உறவுமுறை குறித்துப் பேசுவதற்கு முதலில் பா.ஜ.க.வுக்கு அருகதையே கிடையாது. ஏனென்றால், இந்துத்துவா என்பது உண்மையில் பார்ப்பன பாசிச பயங்கர



இந்து மதவெறியர்களிடமிருந்து விட்டுவிடுமாறு கோரும் இந்த முசுலீம் இளைஞரின் அவலமும், மோடியின் திமிரும் யாருக்கு அவமானம்?

**கடவுள் நம்பிக்கை என்பது வேறு; மதம் என்பது வேறு. உள்ளூர் கிராமதேவதைகள், குலதெய்வங்களை பார்ப்பனப் பெருந்தெய்வங்களின் அவதாரங்கள் என்பதாக்கிப் பித்தலாட்டம் செய்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து பிழைப்புவாதிகளைத் தேடிப்பிடித்து பார்ப்பன பயங்கரவாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

வாத சித்தாந்தம் என்று கறாராகவும் அதிகாரபூர்வமாகவும் இரண்டு போலி கம்யூனிஸ்டுக் கட்சிகளுமே வரையறுத்துக் கொள்ளவில்லை. இந்துத்துவாவின் சாரம் பார்ப்பன சனாதன – வருணாசிரம சாதியத் தர்மம்தான் என்று இக்கட்சிகள் ஒப்புக் கொள்ள மறுக்கின்றன. இன்னமும் பார்ப்பனர்களைப் பிராமணர்கள் என்று மரியாதையுடன் தாம் தமது ஆவணங்கள் – எழுத்துக்கள் பேச்சுக்களில் குறிப்பிடுகின்றனர். அதே போல பார்ப்பன சனாதன மதத்தை பா.ஜ.க சித்தரிப்பதை ஏற்றுக் கொண்டு அதனை இந்துமதம் என்றே நம்புகின்றனர்.

பார்ப்பன–பனியா நலன்களுக்காக உருவாக்கப்பட்ட இந்திய தேசியம் என்ற கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்வதோடு, இந்திய நாட்டிலுள்ள தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அடியோடு மறுப்பதோடு, சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை பிரிவினை வாதம் என்பதிலும் காங்கிரசு, பா.ஜ.க கொள்கைகளில் உடன்படுகின்றனர். இந்து – இசுலாம் ஆகிய மத அடிப்படையிலான இரண்டுமே வகுப்புவாதம், இரண்டிலிருந்தும் சமமாக விலகி நின்று, இரண்டையும் எதிர்ப்பதாகப் போலி கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். ஆனால், இசுலாமியத் தீவிரவாதிகளின் செயல்களை மட்டும்தான் பயங்கரவாதம் என்கின்றனர். இந்துத்துவாவாதிகளின் வெறிச்செயல்களை பார்ப்பன பாசிச பயங்கரவாதம் என்று கூறுவதில்லை.

சமீபகாலம் வரை சாதிய ஒடுக்கு முறை வர்க்க ஒடுக்கு முறையோடு பின்னிப் பிணைந்திருப்பதைக் காண மறுத்து, இடஒதுக்கீட்டுக் கோரிக்கைக்கு கணிசமான ஆதரவு நிலவுவதைக் கண்டு கொண்ட பிறகு தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக அம்மக்களின் போராட்டங்கள் ஆங்காங்கே வெடிப்பதைக் கண்ட பிறகு தான் சாதியப் பிரச்சினையையே இரு போலி கம்யூனிஸ்டுகள் அங்கீகரித்தனர். இப்போது இதற்கெல்லாம் காரணமான பார்ப்பன சனாதன வருணாசிரம சாதிய தர்மம் ''இந்துத்துவா'' வடிவில் மீண்டும் புதுவேகம் பெறுவதைக் காண மறுக்கின்றனர்.

''இந்துமத உணர்வு என்பது இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களுடைய நம்பிக்கை. ஆகவே அந்த உணர்வை, நம்பிக்கையைப் புண்படுத்தாமல், இந்து மத எதிர்ப்பு என்பதாக இல்லாமல் இந்துத்துவப் பாசிசத்தை எதிர்க்க வேண்டும்'' என்று வாதிடும் போலி கம்யூனிஸ்டு கட்சிகள் ''இந்துமத''த்தையும் உள்ளிட்ட மதநல்லிணக்க இயக்கங்கள்




**''மோடியே திரும்பிப் போ!''**
**- தனது வெற்றி திமிரை பம்பாய் வந்து பறைசாற்றிய மோடியை எதிர்த்து ஆர்ப்பாட்டம்.**

நடத்தி, இந்துத்துவப் பாசிசத்திற்கு எதிராக மக்கள் ஆதரவைத் திரட்ட எத்தனிக்கின்றனர்.

அதேபோல ''பார்ப்பன பாசிச பயங்கரவாத எதிர்ப்பு என்பது குறுகிய, பார்ப்பனப் பகை உணர்வை ஏற்படுத்தக் கூடியது. இதுவே ஒரு சாதியக் கண்ணோட்டம்தான்'' என்று வாதிடுகின்றனர்.

உண்மை என்னவென்றால், இந்து மதம் என்பதே பார்ப்பன சனாதன தர்ம – வருணாசிரம சாதியத்தை மூடி மறைப்பதற்காகப் பயன்படுத்தப்படுவதுதான். பார்ப்பன – சத்திரிய – வைசிய சாதி நலன்களுக்கான இந்தப் பார்ப்பன சனாதன தர்மம் என்பதை, நாட்டின் பெரும்பான்மையினரின் மதம் என்பதாகக் காட்டி சமூக ஆதரவு திரட்டிக் கொள்கின்றனர். மக்கள் மத்தியில் உள்ள கடவுள் நம்பிக்கையைக் கேடாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். கடவுள் நம்பிக்கை என்பது வேறு; மதம் என்பது வேறு. உள்ளூர் கிராமதேவதைகள், குலதெய்வங்களை பார்ப்பனப் பெருந்தெய்வங்களின் அவதாரங்கள் என்பதாக்கிப் பித்தலாட்டம் செய்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து பிழைப்புவாதிகளைத் தேடிப்பிடித்து பார்ப்பன பயங்கரவாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

மேலும், தேசிய இன சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களைப் பிரிவினை வாதம் என்று கருதுவது; பாகிஸ்தான் எதிர்ப்பு, காசுமீர் விடுதலை இயக்கத்தை எதிர்ப்பது ஆகியவற்றில் ''தேசிய வெறி''யை ஆதரிப்பது, இசுலாமியத் தீவிரவாதம் என்பது பார்ப்பன பாசிச பயங்கரவாதத்தின் விளைவு என்று கருதாமல் எல்லைதாண்டிய பயங்கரவாதம் என்று கருதுவது இவைபோன்ற நிலைப்பாடுகளில் போலி கம்யூனிஸ்டுகள் காங்கிரசு அடங்கிய ''மதச்சார்பற்ற'' அணியினர் இந்துத்துவாவாதிகளுடன் உடன்படுகிறார்கள்.

ஆகவே, இந்துத்துவாவாதிகள் இந்த நாட்டின் மீதும் மக்கள் மீதும் நிறுவிட எத்தனிப்பதை ஒரு பார்ப்பன பாசிச பயங்கரவாதம் என்று வரையறுப்பது தான் கறாரானது, சரியானது. மற்றபடி இதை இந்துமதவாத பாசிசம் என்று குறிப்பிடுவது கூட சரியல்ல.

இவ்வாறு வரையறை செய்யும் போது போலி கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல, உண்மையான புரட்சிகர, ஜனநாயக இயக்கத்தவர் மத்தியிலே கூட இரண்டு முக்கிய கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அவை:

''இந்துத்துவா என்பதன் பொருள் சனாதன தர்மம் என்றாலும் கூட இந்த அரசியல் சித்தாந்தம் பார்ப்பன நலன்களுக்கு மட்டும்தான் சேவை செய்கிறதா? பார்ப்பன – சத்திரிய – வைசிய சாதிகளின் நலன்களுக்கும் தானே சேவை செய்கிறது? பார்ப்பன – பனியா ஆளும் சாதிகள் – வர்க்கங்களையும் தானே இந்துத்துவாவாதம் பிரதிநிதித்துவப் படுத்துகிறது? ''பார்ப்பன – பாசிச பயங்கரவாதம்'' என்று வரையறுப்பது, பார்ப்பனச் சாதியை மட்டும் குறிவைத்து மற்றபிற ஒடுக்கும் சாதிகள் – வர்க்கங்களைத் தாக்குதல் இலக்கில் இருந்து விடுவிப்பதாகாதா? ஆகவே இந்துத்துவம் என்பது தானே நமது எதிர்த்தரப்பு முழுவதையும் குறிக்கிறது?'' என்கிற வாதம் எழுப்பப்படுகிறது.

''பாசிசம் என்பதே ஒரு குரூரமான – கொடிய எதிர்ப்புரட்சி வன்முறை இயந்திரத்தைக் குறிக்கும்போது 'இந்து மத வெறி அல்லது இந்துத்துவா' பாசிசம் என்கிற வரையறுப்பு போதாதா? அதை ஏன் பயங்கரவாதம் என்று கருத வேண்டும். பயங்கரவாதம் என்பது பாசிசத்தைவிடக் கொடிய – குரூரமான வன்முறையா? பாசிச எதிர்ப்புப் போராட்டத்தில் இருந்து பயங்கரவாத எதிர்ப்புப் போராட்டம் என்பது தன்மையில் வேறுபாடானதா?'' என்கிற வேறுவிதமான கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

5

# குஜராத்: இந்துத்துவத்தின் சோதனைச் சாலை

● மருதையன்

குஜராத்தில் பாரதிய ஜனதா மீண்டும் வெற்றி பெற்றிருக்கிறது. வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களிலும் குஜராத் வழியையே பாரதிய ஜனதா பின்பற்றுமா, அவ்வாறு பின்பற்றினால் வெற்றிபெற இயலுமா என்ற கேள்விகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மோடியின் வெற்றி நம்முன் எழுப்பும் கேள்வியை மட்டும் எதிர் கொள்வோம்.

ஆய்வாளர்கள் சிலர் கருதியது போல ஒருவேளை தமது அன்றாட வாழ்வின் பாதிப்புகள் காரணமாகச் சினம் கொண்ட மக்கள் மோடியைத் தோற்கடித்திருந்தாலும், அத்தகைய தேர்தல் முடிவில் நாம் கொண்டாட ஏதுமில்லை, அதனை குஜராத் முசுலிம் படுகொலைக்கு எதிரான தீர்ப்பாகவோ, மதச்சார்பின்மையின் வெற்றியாகவோ நாம் கருதிக் கொள்ளவும் முடியாது.

ஒருவேளை காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தால் பாரதிய ஜனதாவில் மோடி செல்வாக்கிழந்திருப்பார் என்றும், மோடியின் தீவிர இந்துவெறி அரசியலைக் கைவிட்டு மிதவாத அரசியலைத் தெரிவு செய்யும் கட்டாயம் பாரதிய ஜனதாவுக்கு ஏற்பட்டிருக்கும் என்றும் பல அறிஞர்கள் ஆரூடம் சொல்கின்றனர்.

பாசிஸ்டுகளை இவ்வாறு மதிப்பிடுவது சிறுபிள்ளைத் தனமானது என்பது ஒருபுறமிருக்க, குஜராத் அரசியலின் கடந்தகால அனுபவமும் அந்தக் கனவை மெய்ப்பிக்கவில்லை. 1980–களில் குஜராத் அரசியலில் பா.ஜ.க ஆற்றிய பாத்திரம் இந்த மதிப்பீட்டுக்கு நேரெதிராகத்தானிருந்திருக்கிறது.

●○●

70–களின் துவக்கத்தில் நிலச்சீர்திருத்த எதிர்ப்பு, அரசுக் கொள்முதல் எதிர்ப்பு, 80–களின் துவக்கத்தில் தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு எதிர்ப்பு – எனத் தங்களது உரிமைகளையும் சமூகப் பொருளாதார ஆதிக்கத்தையும் நிலை நிறுத்திக் கொள்வதில் ஆதிக்கச் சாதிகளும் பணக்கார வர்க்கங்களும் மூர்க்கத் தனமாக இருந்தன. அதே நேரத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினர் மற்றும் உழைக்கும் மக்கள் தமது கோரிக்கைகளுக்காகப் போராடும் திறனற்றவர்களாகவும், தங்களது நலனைப் பிரதிபலிக்கும் சீர்திருத்தவாத இயக்கத்தைக் கூடப் பெற்றிராதவர்களாகவும் இருந்தனர். இது குஜராத்தின் சிறப்பான நிலைமை.

பார்ப்பன – பனியா – படேல் சாதி ஓட்டுவங்கியைப் பறிகொடுத்த காங்கிரசு கட்சி, ''சத்திரியர், தலித்துகள், பழங்குடியினர், முசுலிம்கள்'' அடங்கிய ''காம்'' (KHAM) ஓட்டுவங்கியை உருவாக்கிக் கொண்டதெனினும், 1980–இல் இட ஒதுக்கீட்டுக்கெதிராக உயர்சாதியினர் நடத்திய கலகத்தை அது களத்தில் சந்திக்கவில்லை; தனது வாக்குவங்கிக்குத் துரோகமிழைத்தது. கூடுதலாக, அனைத்திந்திய அரசியலில் இந்து வாக்கு வங்கியை உருவாக்கிக் கொள்ளும் முயற்சியில் காங்கிரசு இறங்கியது. பாரதிய ஜனதாவோ மதச் சார்பின்மை வேடம் பூண்டிருந்தது. இதை நாம் இத்தொடரின் இதற்கு முந்தைய பகுதியில் பார்த்தோம்.

●○●

1980 முதல் 90 வரையிலான காலம் அனைத்திந்திய அரசியலில் மட்டுமின்றி குஜராத்திலும் பாரதிய ஜனதாவின் இந்துத்துவ அரசியல் உறுதியாக வேரூன்றிய காலமாகும். 1990–இல் வி.பி.சிங் அறிமுகப் படுத்திய மண்டல் குழு அறிக்கையைத் தனது ரத யாத்திரை மூலம் எதிர் கொண்ட பாரதிய ஜனதாக் கட்சி, இதற்கான சோதனையை ஏற்கெனவே குஜராத்தில் செய்து பார்த்து வெற்றி கண்டிருந்தது. 1985 இல் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கு எதிராக குஜராத்தில் நடைபெற்ற கலவரத்தை, முசுலீம்களுக்கு எதிரான கலவரமாக மடைமாற்றி விட்டது பாரதிய ஜனதா.

**இன்று காங்கிரசு தலைவராக பரிணமித்திருக்கும் வகேலாவிற்கும் பா.ஜ.க. மோடிக்கும் என்ன வேறுபாடு?**



இட ஒதுக்கீட்டுக்கெதிரான 'மேல் சாதி' வெறியர்களின் கலவரத்தைக் கண்டு அஞ்சி 1980 –இல் பின் வாங்கிய சோலங்கி (காங்) அரசு 1985 வரை அந்தப் பிரச்சினையைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. ஆனால் 1985–இல் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனே, தனது 'காம்' ஓட்டுவங்கியைத் தக்க வைக்கும் நோக்கத்துடன் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 18 சதவீதம் அதிகரிப்பதாக அறிவித்தது.

இதன் விளைவாக, ஏற்கெனவே தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்க்கு 21–சதவீதம், பிற்படுத்தப்பட்டோருக்கு 10–சதவீதம் என்றிருந்த ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு 28 சதவீதமாக உயர்ந்தது.

1985 ஜனவரி 11–ம் தேதி அறிவிப்பு வெளியானவுடனேயே இடஒதுக்கீட்டு எதிர்ப்புக் கலகம் தொடங்கி விட்டது. அகமதாபாத்தின் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் துவங்கி வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் என உயர்சாதியின் ஆதிக்கத்திலிருந்த ''படிப்பாளித் தொழில்கள்'' அனைத்துக்கும் கலவரம் பரவியது. தகுதி, திறமை, சமத்துவம் போன்ற இட ஒதுக்கீட்டுக்கெதிரான எல்லா வார்த்தை ஜாலங்களும் பத்திரிக்கைகளை நிரப்பின.

பார்ப்பன – பனியா – படேல் சாதியினரின் வெறித்தனத்தைப் புரிந்து கொள்ள கீழ்க்கண்ட புள்ளிவிவரம் நமக்கு உதவும். 1984–ம் ஆண்டு கணக்கின்படி, தலித், பழங்குடியினர்: 21% பிற்படுத்தப்பட்டோர்: 10% – மொத்தம் 31 சதவீதம் மட்டுமே குஜராத்தில் இடஒதுக்கீட்டின் கீழ் வந்தன. மருத்துவப் படிப்பில்



படிப்பகம்

www.padippakam.com

இவற்றில் 3.4 சதவீதம் மட்டுமே இச்சமூகத்தினரால் நிரப்பப்பட்டது. மீதியிடங்கள் அனைத்தும் 'மேல்' சாதியினருக்கே சென்றது. இதுதான் அன்றைய நிலவரம். 100–க்கு 3 பேர் வருவதைக் கூடச் சகித்துக்கொள்ளவியலாத அளவிற்கு அங்கே தாண்டவமாடியது மேல்சாதிவெறி.

பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 18 சதவீதம் அதிகரித்த ரானே குழுவின் பரிந்துரையின்படி பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பட்டியலில் 22 முஸ்லிம் சாதிகளும் அடக்கம், வெட்டிமைத் தொழில் செய்வோர், கோடித்துணி நெய்வோர் போன்ற சமூகத்தின் கடைநிலையில் வாழும் பரம ஏழைச்சாதியினரான இவர்களுக்கு ஒதுக்கீடு தரப்பட்டதும் இந்து – உயர்சாதி வெறியில் எண்ணெய்யை ஊற்றியது.

அரசுப் பேருந்துகள், வாகனங்கள் எரிந்தன; பயணி ஒருவர் உயிரோடு எரிக்கப்பட்டார்; வேலை நிறுத்தம் கல்வீச்சு எனக் கலவரம் தொடர்ந்தது. சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் நாட்களான மார்ச் 4 முதல் 8 – வரை கட்டுப்பாடான அமைதி நிலவியது. ஆனால் தேர்தலில் காங்கிரசின் வெற்றி அறிவிக்கப்பட்ட மறுகணமே கலவரம் வெறியாட்டமாக மாறத் தொடங்கியது.

இந்திரா கொலை தோற்றுவித்த அனுதாப அலையின் விளைவாகவும், 'காம்' ஓட்டு வங்கியின் துணையுடனும் முன்னைவிட அதிகமான சட்டமன்றத் தொகுதிகளையும், 26 இல் 24 – நாடாளுமன்றத் தொகுதிகளையும் காங்கிரசு கைப்பற்றியிருந்தது. எனினும் இந்தத் தேர்தல் வெற்றியானது, இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரத்தை எதிர் கொள்ளும் அரசியல் துணிவை காங்கிரசுக்கு வழங்கவில்லை. அதே நேரத்தில், படுதோல்வி அடைந்த பாரதிய ஜனதாவோ கலவரத்தைப் பின்னாலிருந்து இயக்கிக் கொண்டிருந்தது.

இந்தக் கலவரம் பற்றி டில்லி பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் உபேந்திர பக்ஷி தனது கட்டுரையொன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்:

''பேருந்துகளையும், அரசு வாகனங்களையும் எரித்த இளைஞர்கள் இந்த வேலையில் நன்கு பயிற்சியளிக்கப்பட்டவர்கள், அவர்கள் 15 பேர் கொண்ட குழுவாக இருந்தனர். இந்தத் தீவைப்புகளின் போது தவறிக் கூட அவர்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை... முன்னர் இட ஒதுக்கீட்டு எதிர்ப்புக் கலகம் நடத்திய 'மூத்தவர்கள்' தான் இந்த இளையவர்களைப் பயிற்றுவித்திருக்கிறார்கள். 50 முதல் 100 பேர் அடங்கிய குழு திட்டமிட்ட முறையில் போலீசை எதிர்கொண்டது.''

''பயிற்சி மட்டுமல்ல, தேவையான 'பொருட்களும்' இவர்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளன. பெட்ரோலில் நனைத்த காடாத் துணிகளைப் பந்து பந்தாக வாகனங்கள், கட்டிடங்கள் மீதும் மனிதர்கள் மீதும் இந்தக் கும்பல் எறிந்தது. உற்பத்தி, விநியோகம், இலக்குகள்... எல்லாம் தெளிவாகத் திட்டமிடப்பட்டுள்ளன. இவை குறித்து உடனே தீவிர விசாரணை நடத்த வேண் டும். இல்லையேல் சாதி ஆதிக்க வெறி பிடித்த நகர்ப்புற கொரில்லாக் கும்பல்கள் குஜராத்தில் (மற்றும் நாடெங்கும்) உருவாவதை நாம் தடுக்க முடியாது''

இதே கும்பல் தான் இந்துத்துவப் பயங்கரவாதிகளாகப் பரிணாம வளர்ச்சி அடைந்து இன்று முசுலிம் இனப்படுகொலையை நடத்தியிருக்கிறது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆளும் வர்க்கங்கள் மற்றும் மேட்டுக்குடி வர்க்கங்கள் உழைக்கும் மக்களுக்கெதிராகக் கொண்டிருக்கும் அகந்தையும், ஒடுக்கப்பட்ட சாதியினருக்கெதிரான மேல்சாதியினரின் துவேசமும் இந்துத்துவப் பாசிசத்தின் முக்கியமான கூறுகள்; இந்த அடித்தளத்திலிருந்து தோன்றி வளர்ந்ததுதான் அதன் முசுலிம் வெறுப்பு என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

பார்ப்பன – பனியா – படேல் சாதி வெறியர்களின் கலவரத்தை எதிர் கொள்ள முடியாத சோலங்கி, இடஒதுக்கீட்டு ஆணையை ஒரு ஆண்டு தள்ளி வைப்பதாக அறிவித்தார். இந்த அறிவிப்பு வந்ததனால் கலவரம் செய்யவில்லை. மாறாக அறிவிப்பு வந்த மார்ச் 18–ம் தேதி இரவே முசுலிம்களுக் கெதிரான கலவரம் தொடங்கியது.

ஏழைத் தொழிலாளர்கள், தலித் மக்கள் மற்றும் முசுலிம்கள் நெருக்கமாக வாழும் தாரியாபூர், கல்லுபூர் (அகமதாபாத்) பகுதிகளில் தான் கலவரம் தொடங்கியது. இந்துக்களின் கோயில் சிலையை முசுலிம்கள் உடைத்துவிட்டார்கள் என படத்துடன் செய்தி வெளியிட்டது ஒரு நாளேடு பின்னர் அது பொய் என்பது நிரூபிக்கப்பட்டது. ஆனால் அதற்குள் 19 பேர் கொலை செய்யப்பட்டுவிட்டனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். 3 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் தீக்கிரையாகின.

இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கலகத்தைப் பின் நின்று இயக்கிய ஆர்.எஸ்.எஸ், முசுலிம் எதிர்ப்புக் கலவரத்தை முன் நின்று நடத்தியது. இட ஒதுக்கீட்டுச் சிக்கலிலிருந்து தப்பிக்கவும், திசைதிருப்பவும் சோலங்கி அரசே மறைமுகமாகக் கலவரத்துக்குத் துணை நின்றது என்றும், இதற்காகவே இந்து – முசுலிம் கிரிமினல்களைச் சிறையிலிருந்து விடுவித்து ஏவிவிட்டதென்றும் கூறுகிறார் அஸ்கர் அலி எஞ்சினியர்.



சூழ்ச்சிகள் எதுவும் சோலங்கியின் பதவியைக் காப்பாற்றவில்லை, பதவிக்கு வந்த நூறே நாட்களில் அவர் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். 100 நாட்களில் 54 நாட்கள் அகமதாபாத் நகரம் ராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. சோலங்கி விலகிய பின்னரும் ஒரு ஆண்டுகாலம் இடஒதுக்கீடு எதிர்ப்புக் கலவரம் தொடர்ந்தது. அமர்சிங் சவுத்ரி முதல்வராக்கப்பட்டார். பார்ப்பன – பனியா – படேல் சாதியினரைத் தாஜா செய்யும் பொறுப்பை பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த சவுத்ரியிடம் ஒப்படைத்தது காங்கிரசு.

பாரதிய ஜனதாவோ பார்ப்பன – பனியாக் கட்சி என்ற முத்திரையை மறைத்து அனைத்து இந்துக்களின் கட்சியாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ளும் முயற்சியில் தீவிரமாக இறங்கியது. பார்ப்பன பனியா படேல் சாதியினரைத் தனது அடித்தளமாகக் கொண்டிருந்த



படிப்பகம்

www.padippakam.com

போதும், வேண்டுமென்றே சத்திரிய சாதியைச் சேர்ந்த ஒருவரைக் கட்சித் தலைவராக நியமித்தது.

இவ்வாறு அன்று பா.ஜ.க தலைவராக நியமிக்கப்பட்டவர்தான் வகேலா. (அதே வகேலாதான் இன்று காங்கிரசு தலைவர்). வகேலாவை நியமித்ததன் மூலம் தான் இடஒதுக்கீட்டுக்கு எதிரியல்ல என்ற தோற்றத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல, இடஒதுக்கீட்டுக்கெதிரான வெளிப்படையான பேச்சுகளையும் நிறுத்தியது பாரதிய ஜனதா.

அதே போல, மீனாட்சிபுரம் மதமாற்றத்தைத் தொடர்ந்து விசுவ இந்து பரிசத் நடத்திய ஏகாத்மதா யாத்ராவில் (இந்து ஒருமைப்பாட்டு யாத்திரை) தொடங்கி, தனது நடவடிக்கைகளில் திட்டமிட்டே தலித்துகளையும் முன்னிறுத்தத் தொடங்கி



"ஒரு ஆலமரம் விழுந்தால் பூமி கொஞ்சம் அதிரத்தான் செய்யும்" - இந்திரா கொலையையொட்டி அப்பாவி சீக்கிய மக்கள் காங்கிரசு குண்டர்களால் கொல்லப்பட்டது (இடது) குறித்து, ராஜீவ் காந்தியின் கவிதை.

யது. குஜராத்தின் மக்கள் தொகையில் சுமார் 15 சதவீதத்தினரான பழங்குடி மக்கள் மத்தியிலும் வி.இ.ப தனது வேலையைத் தொடங்கியது. 'பில்' பழங்குடியினர் கிராமப்புறத்தில் முசுலிம்களைத் தாக்கிக் கொலை செய்த சம்பவம் 1987-இல் முதன் முதலில் நடந்தது. பிறகு 1990-இல் அத்வானியின் ரத யாத்திரையின் போது சூரத் வட்டாரத்தில் மட்டும் 32 கிராமங்களில் பழங்குடியினரால் முசுலிம்கள் தாக்கப்பட்டனர்.

1986-முதல் 88-க்குபின் குஜராத் முழுவதும் சிறிதும் பெரிதுமாகப் பல கலவரங்கள் நடந்தன, இந்த காலகட்டத்தில் மட்டும் மொத்தம் 110 குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இந்த மோதல்கள் "முசுலிம் எதிர்ப்பு இந்துப் பொதுக் கருத்தை" உருவாக்க பாரதிய ஜனதாவுக்குப் பயன்பட்டன.

●○●

இதே காலகட்டத்தில் அனைத்திந்திய அரசியலில் இந்து வாக்கு வங்கியைக் கவர்ந்திழுக்கும் முயற்சியில்தான் காங்கிரசும் ஈடுபட்டிருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்திரா கொலையையொட்டி டில்லியில் சீக்கியர் படுகொலை நடந்தபோது "ஒரு ஆலமரம் விழுந்தால் பூமி கொஞ்சம் அதிரத்தான் செய்யும்" என்று கூறி அந்தப் படுகொலையை நியாயப்படுத்தினார் ராஜீவ். "இந்தப் படுகொலைக்கும் காங்கிரசுக்கும் சம்பந்தமில்லை" என்று ஒரு தந்திரத்திற்காகக் கூட ராஜிவ் சொல்லவில்லை. காரணம், சீக்கிய எதிர்ப்பு இந்து அனுதாப ஓட்டுக்களை முழுமையாக அறுவடை செய்ய காங்கிரசு விரும்பியது.

மேலும் குஜராத்தில் இடஒதுக்கீட்டு எதிர்ப்புக் கலகம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் "இந்த இடஒதுக்கீடு என்ற விவகாரத்தையே நாம் மீளாய்வு செய்து பார்க்க வேண்டியிருக்கிறது" என்று பேட்டியளித்தார் ராஜீவ். தேர்தல் அரசியலின் தேவைக்காக 'காம்' ஓட்டு வங்கியைச் சார்ந்திருக்க நேர்ந்தாலும் காங்கிரசின் இதயம் உயர்சாதி மேட்டுக்குடியினர் பக்கம் தான் இருக்கிறது என்று சூசகமாக உணர்த்தியது இந்தப் பேட்டி.

ஷாபானு வழக் கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக் கெதிராக இசுலாமியப் பழமை வாதிகள் நடத்திய பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டங்கள் முசுலிம் எதிர்ப்பு இந்துக்கருத்தை உருவாக்கத் துணைபுரிந்தன என்கிறார் அஸ்கர் அலி எஞ்சினீயர்.

ஷரீயத் சட்டம் என்ற பெயரில் மணவிலக்குப் பெற்ற இசுலாமியப் பெண்ணுக்கு ஜீவனாம்சம் கூடக் கிடைக்காமல் செய்யும் கொடுமையை மதச்சார்பற்ற சக்திகளும், பெண்ணுரிமை அமைப்புகளும் எதிர்த்தபோது அந்த எதிர்ப்பையே தனது இந்து அரசியலுக்குச் சாதகமாக்கிக் கொண்டது பா.ஜ.க. இசுலாமியப் பழமைவாதிகளைத் தாஜா செய்வதற்காக முசுலிம் பெண்களைக் காவு கொடுக்கும் சட்டமொன்றை ராஜீவ் காந்தி கொண்டுவந்தவுடனே, "இது முசுலிம்களைத் திருப்திப் படுத்தும் சலுகை" என்று கூறி இந்துப் பொதுக்கருத்தைத் தனக்கு ஆதரவாகத் திருப்பிக் கொண்டது பாரதிய ஜனதா.

இந்தச் சூழ்நிலையில் தன்னை இந்துக்களின் காவலனாகக் காட்டிக்கொள்ளவும், போபர்ஸ் உள்ளிட்ட ஊழல் குற்றச்சாட்டுகளிலிருந்து மக்களைத் திசை திருப்பவும் அயோத்திப் பிரச்சினையைக் கிளறிவிட்டது ராஜீவ் அரசு.

உயர்நீதி மன்றத்தில் நிலுவையிலிருக்கும் வழக்கை விசாரிக்காமலேயே பாபர் மசூதியை இந்துக்களின் வழிபாட்டுக்குத் திறந்துவிட வேண்டும் என்று சட்டவிரோதமாக உத்தரவிட்டது மாவட்ட நீதிமன்றம். மனுதாரரோ இந்த வழக்குக்கே சம்பந்தமில்லாத ஒரு நபர். சட்டவிரோதமான தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யாமல், தீர்ப்பு வெளி வந்த நாற்பதே நிமிடங்களில் மசூதியைத் திறந்து விட்டது காங்கிரசு அரசு. பக்தர்கள் என்ற வேடத்தில் விசுவ இந்து பரிசத் ஆட்கள் தயாராக இருந்தனர். மைய அரசின் கட்டுப்பாட்டிலிருந்த தூர்தசன் காமெராக்களும் படம் பிடிக்கத் தயாராக இருந்தன,

இப்படியாக, 1986, பிப்ரவரி முதல் தேதியன்று அடிக்கொள்ளியாக இருந்து அயோத்திப் பிரச்சினையைப் பற்ற வைத்தது காங்கிரசு அரசு. இப்படியொரு முடிவை அமல்படுத்துமாறு அரசை நிர்ப்பந்திக்கிற அளவுக்கு மக்கள் மத்தியில் சங்கபரிவாரத்தினர் இயக்கமெதுவும் நடத்தவில்லை; இந்துப் பொதுக் கருத்தும் அவ்வாறு உருவாகிவிடவில்லை. உள்ளூர் அளவிலான பிரச்சினையாகவும், வி.இ.ப சாமியார்கள் அவ்வப்போது பேசும் பிரச்சினையாகவும் மட்டுமே அயோத்தி விவகாரம் இருந்து வந்தது. தனது அரசியல் நோக்கத்துக்காக ராஜீவ் அரசு செய்த சதிதான் இது என்பதை அருண் நேரு மூன்றாண்டுகளுக்குப் பின் வெளிப்படையாகவே எழுதினார்:

"1986 இன் துவக்கத்தில் முசுலிம் துருப்புச் சீட்டைப் பயன்படுத்தும் நோக்கத்திற்காக முசுலிம் பெண்கள் மசோதாவைக் கொண்டு வந்தோம். அடுத்து, அயோத்திப் பிரச்சினையின் மீதான முடிவை இந்துத் துருப்புச் சீட்டைக் குறிவைத்து இறக்கினோம்."

ஆனால் இரண்டு துருப்புச் சீட்டுகளுமே அத்வானியின் கைக்குப் போய்ச் சேர்ந்தன. ரதயாத்திரை எனும் ரத்தக் களறியைத் துவங்கி வைக்க காங்கிரசு அரசால் உருவாக்கப்பட்ட சோமநாதபுரம் கோயிலையே தெரிவு செய்தது பாரதிய ஜனதாக் கட்சி.

– தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

# பரங்கிப் பூ

துரை. சண்முகம்



"கோழி, எங்க மெத்த வூட்லேந்து வர்றே, காசு பழுத்துச்சா"

"ஆமாம். அது கொடுத்துட்டா மழதான் வரும். கைதான் பழுத்துச்சு. ரெண்டு ரெண்டா எத்தன கருவ வேர போடுது. கோடாலியும் அதும் வூட்டுக் காரன் மண்ட மாதிரி வழவழன்னு கெடக்கு, அம்மாம் வெறவயும் ஒடச் சிட்டு நின்னா ரெண்டுவாய் பழயது திங்குறியாங்குது."

"அப்புறம்" மலர் அவசரமாய் வாய் பிளந்தாள்.

"நானா தின்பேன் பழயத்த, உன் கோடாலிக்குப் போடு அதாவது தெம்பா இருக்கட்டும்ன்னுட்டு ரெண்டு ரூவா காசு வாங்கியாந்தேன்"

"கோழி நீ பெரிய ஆளு! உனக்கா வூட்டுக்கா!"

"சேத்து வச்சி வர்ற தீமிதிக்கு புது ரிப்பன், பொட்டெல்லாம் வாங்கப் போறேன்."

"ஏன் கோழி மளியக் கடைக்கார வூட்டுக்கு சாணி வக்கறதில்லையா? கருக்கல்ல நான் டீ வாங்க போறப்ப சாணி கரைச்சுப் போட்டுட்டு உன்ன தேடுச்சு, சத்தம் போட்டுச்சு."

"எவ்ளோ சாணி வச்சாலும் கரைக்க பத்தல, கரைக்க பத்தலேங்குது; லைங்கரைக்குத்தான் அனுப்பணும் அத. மாடுங்க திங்கவே ஒண்ணும் இல்ல, இதுல சாணி வந்து கொட்டுதாக்கும். போ, போ, பொழுதன்னைக்கும் வேல செஞ்சாலும் கொஞ்சம் பொட்டுக் கடல கூட தராது அந்தப் பொம்பள."

"ஆமாம் கோழி, அன்னைக்கு படையல் போடுறாங்கன்னு போயி வூடு கொண்ட சாமான் கழுவி கொடுத்தா வூட்டுக்கு போறப்ப, வந்த சனம் எல்லாம் தின்னுட்டு போயிடுச்சுன்னு ஒரு துண்டு கறிகூட இல்லாம லவ கொழம்பு கொடுத்திச்சு அந்தப் பொம்பள, அதுலேர்ந்து கூப்பிட்டா போறதே இல்லை. சரி, உங்கப்பாரு மரம் வெட்ட போறதில்லையா?"

"ஆமாம்! ஒரு வாரமா வேல இல்லயாம், எங்கயோ வேதாரண்யம் பக்கம் பைப் போட குழிவெட்ட போவ போறேன்னு சொல்லிட்டு கெடக்கு. பாவம் காசு இல்லேன்னு நான்தான் சேத்து வச்ச காசுல காலைல டீ வாங்கித் தருவேன்; அம்மாவுக்கு வயவேல இல்ல, கஷ்டமாயிருக்குது! சரி, நான் அப்படியே போய் கோனாரு தோட்டத்துல பரங்கிப்பூ இருக்கான்னு பாக்குறேன்"

"எதுக்கு?"

"மார்கழி மாசம்ல, மேலத் தெருவுல தெனம் வீட்டுக்கு வீடு கோலத்துல வச்சா மாசம் பத்து ரூவா கெடைக்கும். பரங்கிப் பூவ பாத்துடலாம் போல இருக்குடி, சாணி கெடைக்க மாட்டேங்குது. ஏய் கொஞ்சம் சாணி தெரட்டி வையேன் வாத்தியார் வீட்ல வேல செய்றில்ல."

"நீ வேற அந்தாளு வேலிக்குள்ளேயே மாட்ட கட்டிக்குறாரு. மாடு போட்டாலும், வாத்தியாரு சாணிய கீழ போட மாட்டேங்குறாரு, பொறுக்கி பொறுக்கி வச்சிக்குறாரு! வேற எங்கயாவது பாக்குறேன்".

விடிகாலைப் பனியில் அலைந்து வெந்துபோன கடைவாயை அதிகம் திறக்க முடியாமல் அவள் சாணிக்குக் கெஞ்சியது பாவமாய் இருந்தது.

இந்நேரம் பள்ளிக் கூடம் போயிருந்தால் எட்டாவது, ஒன்பதாவது படித்திருப்பாள். புல்லறுக்கப் போவதும், மண்ணியத்தில் தண்ணி வந்தா மீன் பிடிக்கப் போவதுமாய் புத்தி வேலைக்குத் திரும்ப, படிப்பு பாதியிலேயே போனது. எல்லாவற்றிற்கும் மேல் கூலி வேலையில் கிடைக்கும் சொற்பக் காசு அவள் அம்மாவுக்கு உதவியாய்ப் போனது. மேய்க்கிற கோழியை போ.. போ.. என கேவி லாவகமாய் அமுக்குவதில் அவளுக்கு இருந்த திறமை, பாட்டன் ஆசையாய் வைத்த செவந்தி என்ற பெயரை அமுக்கி கோழி என்ற பட்டப் பெயராய் அவளுக்கு நின்று போனது.

●○●

"மாமி நல்லா இருக்கா! கால் சவரன்"

"அதான் நன்னா பாக்க பாந்தமா இருக்கு, பந்தநல்லூர்ல எடுத்த மாதிரி தெரியலையே!"

"நூறு, இருநூறுன்னா இங்கதான்",

"அண்ணன் மவ கல்யாணம் மாமி. பட்டம் கட்டுற மொற, அவ வயசுக்கு வந்தப்பவே சரியா செய்யல, அதான் மாயவரம் ஏ.ஆர்.சி. போய்ல வாங்கியாந்தேன்"

"அதானே பாத்தேன்! ஏய் மாயாரம்ன்னேதான் ஞாபகத்துக்கு வர்றது. சேருக்கு சீட்டு கட்டுனோமே அந்தக் கடைய போய்ப் பாத்தியா?"

"அத ஏன் கேக்குறீங்க, அது பொய் அட்ரஸ் மாமிங்குறேன்."

"அடப்பாவி கட்டைல போக, ஆத்துக்காருக்குத் தெரியாம, வாரம் பத்து ரூவா கட்டுனேன், அவருக்கும் கோயில்ல வருமானம் இல்ல. ஒரு சேர்



படிப்பகம்

www.padippakam.com

வாங்கிப் போடலாம்னு கட்டினா அழிஞ் சுபோக, இப்படிப் பண்ணிட்டானே!''

''நானுந்தான் மாமி மூணு மாசம் கட்டி ருக்கேன். என்னமா பேசுனான், மாயாரந் தானே அட்ரஸ்லாம் கொடுத்தானேன்னு நெனச்சேன். சாருக்கு தெரிஞ்சா வேற திட்டுவாரு. சாயங்காலம் ஸ்கூல் விட்டு வந்தா உட்காரக் கூட நேரமில்லாம தண்டல் வாங்க ஓடணும். காச விட்ட கத தெரிஞ்சா மனுசன் உண்டு இல்லேன்னு ஆக்கிடுவாரு'' ஆசிரியர் மனைவி புலம்ப ஆரம்பித்து விட்டாள்.

''அட இந்தக் காலத்துல யார நம்ப முடியுது, நம்ப குத்தாலம் ஜோசியம் அவ சரத்துக்கு அம்பது ரூவா வாங்கிட்டு தோ போய் அனுப்புறேன்னு போனவரு தான், பணத்தையும் காணோம், ஆளையும் காணோம். திருட்டுப் பயலுகளுக்கு காலமா இருக்குதுன்றேன். ஆனா நான் மட்டும் வுட்டுட்டுத் தேட மாட்டேன்...!''

''ஏ செல்வி, அப்படிச் சொல்லப்படா துடி. ஜோசியர், ஜாதகம் பாக்குறவர், வெட்டியான் இவா கிட்ட கொடுத்த காச திரும்ப வாங்கப்படாதும்பா! நம்ம பாவத்த அவா ஏத்துக்குறாளோ இல்லையோ! இரு வாசக்கதவ சாத்திண்டு வந்துடறேன்'' பேசிக் கொண்டே குருக்கள் வீட்டு மாமி அவசர அவசரமாக ஓடினாள்.

''ஆமாம்! இவ வீட்டுக்காரன் குருக் கள்ல, அதான் தர்மம் பேசுறா. தட்ல விழுந்த காசுக்கே என்னா வுடு வுடுறா! நாம ஒழச்ச காசுக்கா! ஆத்திரம் வரு துல்ல''

''சரி சரி வந்துடப் போறாங்க. நீ வேற!'' வட்டிக்கு விடும் ஆசிரியரின் மனைவியும் சேர்ந்து கொண்டாள்.

மதிய நேர இடைவெளியில் திண்ணைப் பேச்சு திசைக்கொன்றாய்ப் போய்க் கொண்டிருந்தது.

●○●

''யக்கா''

குரல் வந்த திசையைப் பார்த்த ஆசி ரியர் மனைவி, ''வா, வா கோழி என்னா பகல்ல இந்த பக்கம்.''

''யக்கா அஞ்சு ரூவா காசு தாயேன் சாயங்காலம் ஆசுபத்திரிக்குப் போவணும்.''





படிப்பகம்

www.padippakam.com

''என்னமோ கொடுத்து வச்சவ மாதிரில்ல கேக்குறா?'' செல்வியும் சேர்ந்து கொண்டாள்.

அதான் கோலத்துக்குப் பரங்கிப் பூ வக்கிறேன்ல அதுல கழிச்சுருங்க, இருபது நாளுக்கு மேல வச்சிட்டேன்ல''.

''பாருடி செல்வி! உனக்கும் எனக்கும் இப்படிக் கணக்கு போடத் தெரியுமா? என்னா நேக்கா கேக்குறா பாரு''

''ஆமாம் பெரிய பரங்கிப்பூ. என்னத்த கொண்டாந்து வக்கிறா? ரெண்டு இதழ்தான் இருக்கு. அடில சாணியாவது கனமா இருக்கான்னா அதுவும் இல்ல.''

கோழிக்கு தொண்டை நரம்பு புடைத்துக் கொண்டு வந்தது.

''ஆங்! ஏன் சொல்ல மாட்டிங்க, பரங்கிப்பூவு வச்சி வச்சி எனக்கு கமறிகிட்டு இருமலே வந்துடுச்சி. இருட்டுல பறிச்சா தெரியாதுன்னு சாயங்காலமே முழு பூவா பறிச்சிட்டு வாரேன், ஊக்கும், சாணி கரைக்குற வூட்டுக்குக் கூட தராம கோலத்துக்கு வக்கிறேன், நல்லா கதை வுடுறீங்களே''

''பாத்திங்களா மாமி, கொஞ்சூண்டு பூவ வச்சிட்டு என்ன பேச்சு பேசுறா''

''காலனி பொண்ணுங்களே அகராதி! அவளுவகிட்ட பேச முடியுமா?'' குருக்கள் மாமியும் குறை சொல்ல பக்கத்து வீட்டுப் பெண்களும் சேர்ந்து கொண்டார்கள்.

''அய்யே! நீ வேறக்கா அந்த குட்டி சரியாவே பூ வக்கிறதில்லேங்குறேன், சில நாள்ல வக்காமலே ஏமாத்திடுறா!''

''சத்தியமா. வுட்டேன், வுட்டேன். நான் தெனம் வக்கிறேன். உங்க வீட்டுக்காரர்தான் எத்தி எத்தி வுடுறாரோ என்னவோ!'' கோழி ஆத்திரத்துடன் பேசினாள்.

''குட்டிக்கு திமிர பாத்தியா? வீட்டுக்காரர் கால இழுத்து இழுத்து நடக்குறத நக்கல் பண்றா, அவ அப்பன் நல்லவன். மறுவார்த்தை பேசமாட்டான். இது என்னமா குதிக்குதுங்குறேன்!''

''எல்லாம் முன்ன மாதிரி இல்ல, அவனும் கோவிலு காவலுக்குன்னு கூப்பிட்டா வரலேன்னுட்டு மணல் மேட்டுக்கு மரம் வெட்டப் போறான்.''

''அது கெடக்குதுக்கா. பையன துபாய்க்கு வேற அனுப்பப் போறானாம், டிரைவர் வேலைல'' கோமதி கையை வளைத்து ஓட்டுவதுபோலக் கேலி பேசினாள்.

***''அட இந்தக் காலத்துல யார நம்ப முடியுது, நம்ப குத்தாலம் ஜோசியம் அவசரத்துக்கு அம்பது ரூவா வாங்கிட்டு தோ போய் அனுப்புறேன்னு போனவரு தான், பணத்தையும் காணோம், ஆளையும் காணோம். திருட்டுப் பயலுகளுக்கு காலமா இருக்கு துன்றேன். ஆனா நான் மட்டும் வுட்டுட்டுத் தேட மாட்டேன்...!''***

''அவாள்லாம் முன்ன மாதிரி இல்ல. நம்ம வீட்டுப் புள்ளைங்கதான் போக்கத்து கெடக்கறது'' மாமி சிலுப்பிக் கொண்டாள்.

''எக்கா, வெட்டிப் பேச்சு எதுக்கு? அஞ்சு ரூவா காச குடு நான் போறேன்.''

''பேச்சப் பாரு நாயே! பெரிசா பூ வச்சியா? வச்சது பரங்கிப்பூவோ, பூவரசம் பூவோ யார் கண்டது! போ.. போ முழுசா வையி ஒண்ணாம் தேதி தருவேன்'' விரட்டினாள் ஆசிரியர் மனைவி.

''இந்தக் குட்டிக்கு கொடுக்கவே கூடாது, அப்பதான் திமிறு அடங்கும்.''

''ஆமாம், நான்தான் இப்ப அவுத்து கிட்டுத் தரப்போறேன், நீ வேற'', தணிந்த குரலில் ஆசிரியர் மனைவி செல்வியிடம் சிரித்துக் கொண்டே பேசினாள்.

''போ... போ.. அப்புறம் வா!''

''யக்கா அப்புறம் நான் பேசிடுவேன்'' கோழி அழாத குறையாய் ஆத்திரம் பொங்க நின்றிருக்க,

''என் வீட்டான்ட வா, நாலு கருவ ஒடிச்சு போடு, அப்படியே கோலத்துக்கு பூ வச்சதுக்கு காசு தர்றேன்'' மாமி நைசாக இடுக்கில் வேலை வாங்கினாள். ''வா.. வா... நான் முன்னாடி போறேன்.''

செம்பட்டை பிடித்த தலையை நறநற வென்று சொறிந்து கொண்டே நடந்தாள் கோழி, ''நாய்ங்க பரங்கிப்பூவ அவளுவ பாடைல போட, இவளுக்கு சாணி அள்ளி அள்ளி கையே நாறிப் போச்சு. இல்லேங்குறாவ, தின்னுடுவாளுவ போல இருக்கு'' கோவத்தில் முனகிய படியே குருக்கள் மாமி வீடு பக்கம் போனாள்.

கருவ குச்சியை ஒடித்துப் போடும் போது தெருப் பெண்கள் நினைவுக்கு வர அவர்களை முனகியபடியே படார் படார் என ஆட்களை முறித்துப் போடுவது போல குச்சிகளை வேகமாக ஒடித்தாள்.

வேலையை முடித்துவிட்டு மாமி வீட்டு வாசல் படியைத் தாண்டி உட்கார்ந்தபடி உள்ளே தெரிந்த போட்டோவையே வெறித்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

கவனித்துவிட்ட மாமிக்கு அர்த்தம் புரியவில்லை.

''கோழி என்னா போட்டோவையே பார்த்துண்டே இருக்கே! சிரிக்கிறே. என்னடி!''

''ஒண்ணுமில்ல''

''ஒண்ணுமில்லாம சிரிக்க பைத்தியமா, சொல்லுடி.''

''இல்ல இந்த போட்டாவுல கையில குச்ச வச்சிகிட்டு உட்காந்துருக்குறத பாத்தா, எங்க தாத்தா மாதிரி இருக்குது. அது இப்படித்தான் வயல்ல போய் குச்ச ஊனிகிட்டு வெளிக்குப் போவும். ஒரு நாளு இப்படியே உட்கார்ந்து வெளிக்குப் போறப்பவே செத்துப் போயிடுச்சி, அதான் அத மாதிரி தெரிஞ்சது.''

''நாயே நாயே! அவா யார் தெரியுமா? மகா பெரியவா, சங்கராச்சாரியார்! அவா தபஸ்ல இருக்கிறது உனக்கு கக்கூசு போற மாதிரி தெரியறதா? உங்கிட்ட போய்ப் பேசினேன் பாரு. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை. இந்தா காச மொதல்ல பிடி'' எரிந்து விழுந்தார் மாமி.

''நடந்தததானே சொன்னேன், தப்பா'' விட்டெறிந்த அஞ்சு ரூவா காசை எடுத்துக் கொண்டே கோழி முணு முணுத்தாள். அதற்குள் குருக்கள் வீட்டுக்கு வர, ''ஏண்டி கோழிகிட்ட என்ன தகராறு'' என்று தேங்காய் மூடி பையை மாமியிடம் நீட்டியதைப் பார்த்த கோழி, ''சாமி, கொஞ்சம் திங்க தேங்காய் தாங்களேன்'' என்றாள்.

''என்ன சொன்னா தெரியுமா? மகா பெரியவா ஒக்காந்துண்டுருக்கறது அவ தாத்தா கக்கூஸ் போற மாதிரி இருக்காம்'' மாமி கரித்துக் கொட்டினாள்.

''சரி சரி அவ குல புத்தி அவளுக்கு. கண்டதுகளையும் எதுக்கு ஆத்துக்கு அழய்க்கிற! அவ அண்ணன் வேற துபாய் போகப் போறானாம். என்ன,



படிப்பகம்

www.padippakam.com

**''இல்ல இந்த போட்டாவுல கையில குச்ச வச்சிகிட்டு உட்காந்துருக்குறத பாத்தா, எங்க தாத்தா மாதிரி இருக்குது, அது இப்படித் தான் வயல்ல போய் குச்ச ஊனிகிட்டு வெளிக்குப் போவும். ஒரு நாளு இப்படியே உட்கார்ந்து வெளிக்குப் போறப்பவே செத்துப் போயிடுச்சி, அதான் அத மாதிரி தெரிஞ்சது.''**

***''நாயே நாயே! அவா யார் தெரியுமா? மகா பெரியவா, சங்கராச்சாரியார்! அவா தபஸ்ல இருக்கிறது உனக்கு கக்கூசு போற மாதிரி தெரியறதா? உங்கிட்ட போய்ப் பேசினேன் பாரு. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை. இந்தா காச மொதல்ல பிடி'' எரிந்து விழுந்தார் மாமி.***

போய் கக்கூஸ் கழுவப் போறான்'' குருக்கள் எகத்தாளமாய் கோழியைச் சீண்டினார்.

கோழிக்கு கோவம் வந்தாலும் அடக்கிக் கொண்டாள்.

''என்ன கோழி, உங்க அண்ணன் துபாய்க்குப் போகப் போறானாமே...''

''நன்னா அரபு ஷேக்குக்கு கக்கூ செல்லாம் கழுவுவேன்னு சொன்னானா? வேணுன்னா இங்கேயே பழகிக்கச் சொல்லிடு என்ன?'' ஹ... ஹா... மாமியும் குருக்களும் சேர்ந்து சிரிப்பொலி எழுப்ப கோழிக்குக் கோபம் தலைக்கேறியது.

''ஆமாம்... எங்கண்ணன் துபாய்ல கக்கூசு கழுவுதோ இல்லையோ நீங்க தெனைக்கும் பந்தநல்லூர் கோயில் சாமிக்கு செம்புல தண்ணி எடுத்துகிட்டு போறீங்களே எதுக்கு... சாமிக்கு சூத்து கழுவிவுடத்தானே'' வெடுக்கெனச் சொல்லிவிட்டு கோழி ஓட, குருக்கள் பின்னாலேயே வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

●○●

**மா**ரி வேகவேகமாய் நடந்துவர ரேவதிக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''ஏய் ஒங்கப்பன் வேகமா வருது என்னன்னு விவரம் புரியலேயே.''

ரேவதிக்கு பதைபதைப்பாக, தெரு வாசலில் உட்கார்ந்து பொறுமையாக பவுடர் அடித்துக் கொண்டிருந்தாள் கோழி.

வந்த வேகத்தில் மாரி கோழியைப் பிடித்து இழுத்து கன்னத்தில் ஓங்கி அறைய, யம்மா என காட்டாமணக்குச் செடிக்கு ஓரமாய்ப் போய்ச் சுருண்டு விழுந்தாள். கருத்த கன்னத்தில் பூசிய பவு டரையும் தாண்டி சிவப்புக் கோடுகள் தெரிய ஆரம்பித்தது.

''ஏம் பேயி புள்ளைய இப்படி அடிக்கிற''

''அந்த எரும என்னா செஞ்சிட்டு வந்திருக்கு தெரியுமா? நம்ம கோயில் குருக்கள போயி சாமிக்கு தெனம் சூத்து கழுவி வுடுறியான்னு கேட்டிருக்கு. என்னா திமிரு இதுக்கு? அவரு வாயால சாபம் வுட்டா குடும்பம் உருப்படுமா!''

''ஏண்டி உனக்கு இந்த கெட்ட புத்தி, கேக்கலாமா அவுங்கள நாயே'', ரேவதி ஒரு அடி போட்டாள்.

கன்னத்தில் வழிந்த நீரை துடைக்காமலே கோழி எகிறிக் கொண்டு வந்தாள். ''ஊம் ஊம் அவரும் அந்த பொம்பளையும் சேந்துகிட்டு அண்ணன் துபாய்ல கக்கூசு கழுவப் போறான்னு எத்தன வாட்டி சொன்னாங்க தெரியுமா? அதான் பதிலுக்குச் சொன்னேன்! அவுங்க மட்டும் சொல்லலாமா?''

''அதுக்காக பெரியவங்க சின்னவங்க வித்தியாசம் இல்லாம, உனக்கு என்னா இத்தன ஆளும்! நாயே.. எரும... வா என்னோட'' என்று இன்னும் ரெண்டு போட தேம்பித் தேம்பி அழுதவளை கையைப் பிடித்துத் தரதரவென்று கோயில் பக்கம் இழுத்துக் கொண்டு போனான் மாரி.

''தே நீ வேற அதுங் கையை பிச்சிராதே'' என்று புலம்பினாள் ரேவதி.

''புள்ள வளத்துருக்க பாரு... சே போ நீ!'' மனைவியைத் துரத்திவிட்டு மகளை மட்டும் இழுத்துக் கொண்டு போனான்.

●○●

கோழியைப் பார்த்தவுடனேயே குருக்கள் மந்திரம் சொல்வது போல் முனக ஆரம்பித்தார். சகல விதமான கெட்ட வார்த்தைகளும் பாராயணம் போல கோயிலுக்குள் ஒலிக்க ஆரம்பித்தன.

''இந்தாங்க சாமி இந்த அடங்காப் பிடாரிய நீங்க வெட்டிப் போட்டாலும் சரி...'' ஆத்திரத்தோடு கோழிய இழுத்து தள்ள குருக்கள் பக்கத்தில் போய் காலில் விழுவது போல விழுந்தாள்.

குருக்களைப் பார்த்தவுடன் வெடுக் கென எழுந்து கொண்டு அழுகையை அடக்கிக் கொண்டு தேம்பித் திமிறினாள்.

''இந்தா இந்த சூடத்த கொளுத்தி நல்ல புத்தியக் கொடுன்னு பகவான வேண்டிண்டு இனிமே பெரியவாளை எதிர்த்துப் பேசமாட்டேன்னு அடிச்சு சத்தியம் பண்ணிட்டுத் திரும்பிப் பார்க்காம ஓடு.''

குருக்கள் எரிச்சலாய்ப் பேச ஒரு கணம் வெறித்தவள், மாரி அதட்ட, விடு விடுவென சூடத்தைக் கொளுத்தி கையால் அடித்தபடி முனகினாள். மாரி சொன்னதுமாதிரி குருக்கள் காலிலும் விழுந்து ''மன்னிச்சுடுங்க'' என்று முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு சொன்னாள்.

''இன்னம ஏதாவது கேள்விப் பட்டேன் வெட்டிப் போட்டுடுவேன். கழுத வா இப்டி'' மகளின் கையை வெடுக் கென்று இழுத்தான் மாரி.

''மனசுல வச்சுக்காதீங்க சாமி'' என்று மனசு இன்னும் ஆறாதவன் போல கும்புடு போட்டுக் கிளம்பினான் மாரி. குருக்கள், ''போ... போ என்ன பண்றது கலிகாலம் வந்துடுத்து'' என்று கடிந்தபடியே ஜாடை காண்பித்தார்.

''பாத்தியா அந்த மனுசன்! பாத்தா என்னமா சிரிச்சுப் பேசுவாரு, அவரு மூஞ்ச தூக்கிக்குற மாதிரி பண்ணிட்டியே, நாயே'' என்று அங்கேயே இன்னும் ரெண்டு போட்டார் மகளை.

அழுதுகொண்டே வந்தவள்.. தெருவில் பரங்கிப்பூவைக் கண்டதும் சற்றே வேகத்தைக் குறைத்தாள்.


''இந்த மயிரு பூவால வந்ததுதான் இதெல்லாம். இன்னம பரங்கிப்பூவு கோலம்னு தெரு பக்கம் போ காலை ஒடிச் சுடுறேன். பேசாம வீட்ல தின்னமா, கெடந்தமான்னு இல்லாம'' எரிச்சலோடு ரோட்டில் கிடந்த பரங்கிப்பூவை மிதித்து எத்தினான் மாரி.

எத்தனை நசுக்கினாலும் பரங்கிப்பூ தன் நிறத்தை இழக்காமல் ஓரமாய்ப் போய் பளீரென்று தனது அடையா ளத்தைக் காட்டியபடி விழுந்தது. அதையே திரும்பித் திரும்பி ஏக்கத்துடன் பார்த்தபடியே அப்பாவுக்கு முன்னாலே போய்க் கொண்டிருந்தாள் கோழி. ●



படிப்பகம்

www.padippakam.com




எண்களுக்குரிய விளக்கங்கள் அடுத்தப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விண்வெளியை இராணுவ மயமாக்குவது (எதிர்காலத் திட்டம்) | இரசாயனப் போர்க் கருவிகள் | இறக்குமதி செய்யப்பட்ட போர்க் கிரிமினல்கள் வாழுமிடங்கள் | உள்நாட்டுப் போர்க் கிரிமினல்கள் | தனியார் கூலிப்படைக் கம்பெனிகள் | இராணுவத் தளங்கள் | பயங்கர வாதிகளின் பயிற்சி முகாம்கள் |



● புதிய கல


படிப்பகம்

www.padippakam.com

# யார் பயங்கரவாதி?

## ...ற்றுயிரும் கொலையுயிருமாயிருக்கும் ஈராக்கா?

## ஆயுதமே சொத்தாக - கொலை செய்வதே தொழிலாக வாழும் அமெரிக்காவா?




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ... ஆயுதக் ...திகள் | முக்கிய ஆயுதத் தளவாடத் தயாரிப்பாளர்கள் | பல்கலைக் கழகங்கள் (கொள்கையியல் மற்றும் சிந்தனைப் பெட்டகங்கள்) | மரபணு உயிரியல் ஆயுதங்கள் | அணு ஆயுத உதவி மையங்கள் | ஏவுகணைகள் (BMD) (தாக்குதலுக்கும், தற்காப்புக்கும்) | ஓய்வு, உல்லாசம் பொழுது போக்குத் தலம் |



படிப்பகம்

www.padippakam.com

# யார் பயங்கரவாதி?

## குற்றுயிரும் கொலையுயிருமாயிருக்கும் ஈராக்கா?
## ஆயுதமே சொத்தாக - கொலை செய்வதே தொழிலாக வாழும் அமெரிக்காவா?

இல்லாத ஆயுதங்களை ஈராக்கில் இருப்பதாக கதை விடுவதற்கு உலகமே செவி கொடுக்க வேண்டும், என்று மிரட்டும் அமெரிக்காவைக் கண்டு உலக நாடுகளின் அரசாங்கங்கள் வேண்டுமானால் பயப்படலாம், மக்கள் பயப்படவில்லை. வெள்ளை மாளிகைக்கு வெளியே ''எண்ணெய்க்காக ஈராக்கைத் தாக்காதே'' என்று விண்ணதிர முழங்கிய அமெரிக்க மக்களைப் போல உலகெங்கிலும் போர் எதிர்ப்பு போராட்டங்கள் தீவிரமாகத்தான் முன்னேறி வருகின்றன. பாட்டாளி வர்க்கம் மற்றும் ஜனநாயக ஆர்வலர்களின் சர்வதேச உணர்வுக்கு உற்சாகமளிக்கும் காலமிது. அமெரிக்கா, இங்கிலாந்தைச் சேர்ந்த 200 போராளிகள் ஈராக்கில் தங்கி மனிதக் கேடயங்களாக அரணமைப்போம் என்று உறுதி கொண்டிருக்கின்றனர். இத்தகையப் போராட்டங்களில் ஒன்றாய் 'இன்டி மிடியா' எனும் இணையத்தளத்தைச் சேர்ந்த அமெரிக்கப் பிரிவு நண்பர்கள், ஈரேழு பதினாலு உலகத்தையும் தகர்க்கும் வண்ணம் அமெரிக்கா குவித்து வைத்திருக்கும் நாசகார ஆயுதங்களைப் பற்றி ஒரு வரைபடம் வெளியிட்டிருக்கின்றனர். (முன் பக்கம்). அதில் 130-க்கும் மேற்பட்ட தகவல்கள் உள்ளன. அதன் சுருக்கப்பட்ட வடிவத்தை இங்கே நன்றியுடன் வெளியிடுகிறோம்.

### 1. பங்கர் நீர்மூழ்கிக் கடற்படைத்தளம் (BNSB)

**இடம்: பங்கர்,** போர்த்தந்திர முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுதத் தாக்குதல் மற்றும் தரை-வான் வழித் தாக்குதல் திறன் கொண்ட 4 நீர்மூழ்கித் தொகுப்புகள் நிறுவப்பட்டுள்ள இடம். அமெரிக்கப் படையில் மொத்தமுள்ள 18 நீர்மூழ்கித் தொகுப்புக்களில் 4 இங்கே உள்ளது. ஒவ்வொன்றும் மூன்று திசைகளில் பாயக்கூடிய 21 ஏவுகணைகளைக் கொண்டது.

### 2. சர்வதேச வணிகச் சங்கம் (அரசுச் சலுகை பெற்றது) (ICI)

**சலேம்:** வாஷிங்டன் ஆணையின் பெயரில் சியர்ரா லியோனில் வெறித்தனமான போரை நடத்திக் கொள்ளை லாபம் ஈட்டிய நிறுவனம். அமெரிக்காவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் ஐந்தாவது முக்கிய நாடான நைஜீரியாவில் அரசியல் 'நிலைத் தன்மை'யை ஏற்படுத்துவதற்காக இப்போர் நடத்தப்பட்டது. அமெரிக்கத் தூதர் இத்தனியார் நிறுவனத்துக்கு போரில் ஈடுபடும் உத்தரவை எழுத்துபூர்வமாகவே வழங்கியிருக்கிறார். அமெரிக்கச் சட்டத்தின்படி, அந்நாட்டுக்காகத் தனியார் நிறுவனம் போரில் ஈடுபடக் கூடாது - அது கிரிமினல் குற்றம்.

### 3. புக்டெல் நிறுவனம்

**சான் ஃபிரான்சிஸ்கோ:** உலகிலேயே மிகப்பெரிய கட்டுமான நிறுவனம். அதன் ரேகை பதியாத இடம் இல்லை. அமெரிக்க என்டர்பிரைஸ் கழகம், ஹெரிடேஜ் நிதி நிறுவனம் போன்ற வலதுசாரி நிறுவனங்களின் மூலம் பிற்போக்குச் சிந்தனைகளைப் பரப்ப கோடிக்கணக்கில் பணத்தைக் கொட்டுகிறது. அதன் தலைமையக அறைக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்கும் இடையே சென்று வர ரகசியக் கதவே உள்ளது. ஜியார்ஜ் ஷூல்ட்ஸ், காஸ்பர் வெயின்பெர்கர், பிலிப் அபீப், ரிச்சர்டு ஹெல்ம்ஸ், வில்லியம் கேஸே போன்ற உயர் அதிகாரிகளுடன் இந்த வழியாகக் கள்ள உறவு நடக்கிறது. மத்தியக் கிழக்கில் உள்ள எண்ணெய் வயல்கள், சிஐஏ ஒப்பந்தங்கள், இராணுவத் தளங்கள், தென் ஆப்பிரிக்க நாடுகளின் மின் - அணுசக்தித் திட்டங்கள், அண்மையில் ஒப்பந்தமான அலாஸ்காவின் கிரீலி துறைமுகத்தில் அமெரிக்காவின் இராணுவத் தளம் (தாக்கவரும் ஏவுகணைகளை வழி மறிக்கக்கூடிய, சிலாஸ் எனப்படும் ரகசிய நிலவறைகளில் வைக்கப்படும், திருப்பித்தாக்கும் ஏவுகணைகள் இங்கே கட்டப்படுகின்றன) ஆகியவை இந்தக் கட்டுமானக் கம்பெனியின் 'சின்ன' வேலைகள்.

### 4. லிவர்மூர் தேசியச் சோதனைச் சாலை

**லிவர் மூர், மத்திய அமெரிக்கா:** அணு ஆயுதங்களை அதன் தயாரிப்பு, கூடுதல் வளர்ச்சி, சோதனை என்று எல்லா நிலைகளிலும் ஆய்வு செய்யும் கூடம். அதிபயங்கரமான வெடி பொருட்களை வெடிக்கச் செய்யும் வெட்டவெளிப் பகுதி கதிரியக்கக் கருவிகள் மூலம் தனிமங்களைக் கூறு பிரிக்கும் ஆலை போன்ற எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்ற நிறுவனம்.

### 5. ஹூவர் கழகம் - 'போர்', 'புரட்சி', 'உலகச் சமாதானம்'

**பாலோ ஆல்டோ:** ஸ்டேன்போர்டு வளாகத்தில் பாதுகாப்போடு அமைக்கப்பட்டுள்ளது. ரீகன் போர்வெறியாட்ட காலத்தில் அரசுச் செயலரான ஜார்ஜ் ஷூல்ட்ஸ் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான காண்டோலீசா ரைஸ் போன்றோரின் 'தாயகம்'. மரபணு மாற்றம் செய்து உருவாக்கப்படும் உயிரிகளை உற்பத்தி செய்யும் முக்கிய இடம் - இந்த நூற்றாண்டில் உலக உணவு உற்பத்தியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அமெரிக்காவின் ஆதிக்கத் திட்டத்தின் கீழ் வருகிறது.

### 6. டக்வே சோதனைக் களம்

ரசியாவின் மீது தாக்குதல் கிருமிப் போர் நடத்துவதற்காக முன்பு ஆயிரம் வெட்டவெளிச் சோதனைக் களங்கள் இங்கே அமைக்கப்பட்டிருந்தன. புதிய வகை நோய்கள் பரப்பவும், ஏற்கெனவே உள்ள நோய் வகைகளில் பல ரகங்களைக் கூட்டவும், மூளைச்சுரம், மலைப் பகுதிகளில் புள்ளிச் சுரம், கிளி போன்ற பறவை இனங்களின் மூலம் மனிதர்களுக்குப் பரவும் நிமோனியா போன்ற தொற்றுக் கிருமி நோய்கள், கியூ சுரம், கால்நடைகள் மூலம் தொற்ற வைக்கும் ஆந்திராக்ஸ், புரூசெல்லோசிஸ், பிளேக், தோல் புண், சுரம், எடைகுறைதல் போன்று நோய்க் கூறுடன் கால்நடைகளைத் தொற்றி அதன்மூலம் மனிதர்களுக்கு ஏற்பட வைக்கும் தொற்றுமுறை, கொக்கி நாடாப்புழுத் தொற்று - ஆகிய பலவித நோய்களைப் பரப்பவும் இங்கே ஆய்வு செய்யப்படுகின்றன. ஆந்திராக்சையே ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் அளவு அதன் பலப்பல ரகங்களை உற்பத்தி செய்யும் சோதனையைத் தற்போது நடத்துகிறது இந்தக் களம்.

### 7. யுக்கா மலைத்திட்டம்

**லாஸ்வேகாஸ்:** உயர் வகையிலான பாளமாக மாற்றப்பட்ட கதிரியக்கக்



படிப்பகம்

www.padippakam.com

கழிவையும், 2,500 டன் எடையுள்ள அணு எரிபொருள் கழிவையும் ''பாதுகாப்பாக'' நிலவறைகளில் சேமித்து வைக்க ஏற்பாடுகள் நடக்கின் றன. யுக்கா மலை உள்ள பகுதியில் எந்நேரமும் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் உண்டு; அப்படி ஏற்பட்டால் கதிரியக்கம் (புளூட்டோனியம்) கசிந்து வளி மண்டலம் மாசுபடும்; அடிநில நீர்மட்டம் நஞ்சாகி விடும்.

**8. ரேதியான் ஏவுகணைத் தொகுப்பு ஆய்வுக் கூடம்**

**டஸ்கான்:** வளிமண்டலத்துக்கு வெளியே மணிக்கு 16,000 மைல்கள் தாவிச் சென்று பின் எதிரியின் ஏவுகணையைக் குறிவைத்துத் தாக்கி அழித்துவிடும் வல்லமை கொண்ட கொலை ஊர்தி இங்கே வடிவமைக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஊர்திக்கும் 25 மில்லியன் பவுண்டு செலவா கும்.உலகிலேயே மிகமிக விலையுயர்ந்த ஆயுதத் தளவாடம் இதுவே. ''நட்சத்திர மண்டலப் போரு''க்காக உருவாக்கப் பட்ட இந்தக் கொலைக்கருவியை அமெரிக்க இராணுவ வலிமையின் மகுடத்தில் பதித்த ரத்தினம் என்று பீற்றிக் கொள்கிறார்கள்.

**9. ஏ.ஜி. பையோ**

**போசோமான்:** கொலம்பியாவின் காடுகளில் ஏழை விவசாயிகள் மற்றும் இடதுசாரி கொரில்லாக்கள் வாழ்கின்ற பகுதிகளில் புல், பூண்டு, பச்சைகளை முற்றிலும் அழித்துப் பாலைவனமாக்கக் கூடிய தெளிப்பு ரசாயனக் கலவை ஒன்றை வீசுவதற்காக இங்கே தயாரிக் கிறார்கள். பயிர்களின், புல்வகைகளின் பாரம்பரியக் குணங்களை மாற்றிவிடக் கூடிய ரசாயனத்தை அடிப்படையாக வைத்து அக்கலவை உண்டாக்கப் படுகிறது.

**10. கூர்ஸ் குடும்பம்**

**கோல்டர் சி.ஓ:** 1973-இல் ஹெரிடேஜ் நிறுவனம் தொடங்குவதற்குத் தேவையான மூலதனம் 2,50,000 டாலர்களை இக்குடும்பம் அளித்தது. நிகராகுவாவில் ரீகன் நிர்வாகத்தால் மறைமுகமாக நடத்தப்பட்ட போருக்குத் தேவையான நிதித் தேவைகளையும் கூர்ஸ் குடும்பம் கவனித்துக் கொண்டது. அப்போரில் 30,000 நிகராகுவா மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

**11. அல்லயன்ட் டெக்சிஸ்டம்ஸ்**

**அல்லயன்ட் டெக்சிஸ்டம்ஸ் (ஹாப்கின்ஸ்):** 1991 வளைகுடாப் போரின் போது ஏராளமான யுரேனியம்




**இத்தாலி நாட்டின் ப்ளாரன்ஸ் நகரில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.**

வீசப்பட்டதால் பாதிக்கப்பட்டு தெற்கு ஈராக்கில் பிறந்த குழந்தைகள் அரைகுறை முண்டங்களாகப் பிறந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு கண் உள்ள, வாயில்லாமல், முண்டமாக, பிண்டமாக, கைகள் இல்லாமல், பிறப்புறுப்புகள் சிதைந்ததாக இப்படிக் கொடூரமான பாதிப்புக்களோடு ரத்தக் களறிகளாகப் பிறந்த குழந்தைகளின் நிழற்படங்களைப் பார்த்துப் பதறியிருப் பீர்கள். ஏன் இப்படி நடந்தது? போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகள் மற்றும் அவற்றை வீசிய படைக் கலங்களில் செறிவு தளர்த்தப்பட்ட யுரேனியம் பயன்படுத்தப்பட்டது. அல்லயன்ட் கம்பெனி அந்தப் போருக்காக அமெரிக்க விமானப் படைக்குத் தயாரித்துக் கொடுத்த அப்படிப்பட்ட 30 மி.மீ அளவு கொண்ட ஒன்றரைக் கோடி பி.ஜி.யூ. 14 வகைக் குண்டுகளும், எம்-829 வகை வேட்டுகள் 10 லட்சம் சுற்றுக்களும் தான் பிறப்பிலேயே குழந்தைகள் சாவதற்குக் காரணம்; அடுத்த தலைமுறைகளும் அழியட்டும் என்று தெரிந்தே செய்கின்ற அமெரிக்கப் போர்வெறிதான் காரணம்.

**12. உயிர்மரபு மருத்துவ ஆய்வுக்கான தென்மேற்கு நிதியம்**

**சாம் அன்டோனியோ:** அமெரிக்காவில் இப்படிப்பட்ட 7 சோதனைச் சாலைகள் உள்ளன. இங்கு தயாரிக்கப்படும் அதிபயங்கரமான 'இயக்கி' - மனிதர்கள் மீது தாக்கினால் உண்டாகும் கொடூரமான நோய்களுக்கு நிவாரணமும் இல்லை, மருத்துவமும் இல்லை. இதற்கு 'உயிர்மரபியல் தற்காப்புப் போர்''என்று பெயர் சூட்டியுள்ளார்கள். அமெரிக்கா வுக்குப் பாதுகாப்பு; உலகநாடுகளின் மக்களுக்கோ உயிர்க் கொல்லி. 2002 அமெரிக்க 'பட்ஜெட்' இதற்காகவே 600 கோடி டாலர் நிதியை ஒதுக்கியுள்ளது.

**13. சிகாகோ பொருளாதாரப் பள்ளி - பல்கலைக்கழகம்**

**சிகாகோ:** சிலியில் 1973-இல் ஜனநாயக பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்குப் பிறகு ஜெனரல் அகஸ்டோ பினோசெட் இந்தப் பல்கலைக்கழத்திலிருந்து ஒரு குழுவை அழைத்து வந்தான்; தனியார்மயம், ''வர்த்தகத் தாராளவாதம்'' என்ற அரசியலைத் தீவிரப்படுத்தினான்; இந்த மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்த பல ஆயிரக்கணக்கான எதிர்த் தரப்பினரைச் சித்திரவதை செய்து கொலையும் செய்தான். பின்னாளில், லத்தீன் அமெரிக்க நாடுகளில் 80,90ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட சந்தைச் சுதந்திரப் பொருளாதாரத்தை, ''சிகாகோ பையன்கள்'' முதலில் சோதித்துப் பார்த்த இடம் தான் சிலி.

**14. கேட்டர்பில்லர்**

**பெயோரியா:** இசுரேலில் பயன்படுத்தும் டி-9 ரக பலத்த கவசம் பூண்ட கேட்டர் பில்லர் நிலச் சமன் கருவி. பாலஸ்தீனத் தில் அத்துமீறிக் கையகப்படுத்திய இடங்களில் வீடுகளை இடித்துத் தரை மட்டமாக்கவும், உயிரோடு மக்களைப் புதைக்கவும், நகர்ப்புறக் கட்டுமானங் களை உருத்தெரியாமல் அடித்து நொறுக்கவும் இசுரேல் பயன்படுத்தி வருகிறது. 2002 ஏப்ரல் மாதம் ஜெனின் என்ற பிராந்தியத்தில் இந்த அமெரிக்கக் கருவிகளை ஏவி நகரத்தை அடித்துத் தரைமட்டமாக்கியது; 4000 பாலஸ்தீனி யர்கள் வீடிழந்தனர். மற்றவர்கள் சிதிலத்தின் கீழே உயிரோடு புதைக்கப் பட்டார்கள். சர்வதேச மனித உரிமைக்



படிப்பகம்

www.padippakam.com

கண்காணிப்புக் குழு இதனை ''போர்க்காலக் கிரிமினல் குற்றம்'' என்று கூறி இசுரேலைக் குற்றம் சாட்டியது.

**15. மான்சாண்டோ**

மான்சாண்டோ கம்பெனிக்கு ஒரு பெரிய கிரிமினல் வரலாறே உண்டு. பயிர்ப் பச்சைகளை அழித்து விடும் ஏஜெண்ட் ஆரஞ்சை உற்பத்தி செய்த கம்பெனியே மான்சாண்டோ. வியட்நாம் போரின் போது மக்களை அழிக்க அந்த விஷப் பொடியைத் தூவி பல லட்சம் பேரை அமெரிக்கப் படை கொன்றது. இப்போது கொலம்பியப் போராளிகளை விஷப் போதை கொடுத்து அழிக்க 'மருந்து' தயாரித்து வருகிறது. இதன் பெயர் ரவுண்ட் அப் அல்ட்ரா. இது பயிர்களை அழிக்கக் கூடிய விஷப்பொருள். கோக்கோ பயிரை மட்டுமல்லாமல், எல்லாப் பயிர் பச்சைகளையும், விலங்குகளையும் ஒரே அடியில் அழிக்கக் கூடியது.

**16. ஜெனரல் வெஸ்லி கிளார்க்**

**லிட்டில் ராக்:** யுகோஸ்லாவியப் போரில் செய்த குற்றங்களுக்காக, (ஆற்றல் குறைந்த யுரேனியத்தைப் பயன்படுத்தியது, கொத்துக்கொத்தான குண்டுகளை மக்கள் மீது வீசியது, ராணுவமல்லாத வீடுகள் - கட்டிடங்களைத் தகர்த்து அழித்தது, பல ஆயிரக்கணக்கான மக்களைத் தாக்கிக் காயப்படுத்தியது, கொன்றது) தேடப்படும் இவன் அமெரிக்காவில் பாதுகாக்கப்படுகின்றான்.

வெஸ்லி கிளார்க் போல உலகெங்கிலும் அமெரிக்கா நடத்திய போர்களுக்குத் திட்டம் தீட்டிக் கொடுத்த மற்றும் போர்களில் ஈடுபட்ட, ஹார்வர்டு பேராசிரியர் சாமுவேல் ஹண்டிங்டன், ஜெனரல் ஹெக்டார், ஜெனரல் சின்டாங் பஞ்சைதான் போன்ற பல ராணுவ அதிகாரிகளின் குற்றங்கள் நிரூபிக்கப் பட்ட பிறகும், அமெரிக்கா அவர்களுக்கு மறுவாழ்வு அளித்து உயர் பதவிகள் கொடுத்துக் கவுரவித்திருக்கிறது. கிரிமினல்களின் பாதுகாவலனே அமெரிக்க அரசு.

**17. ஹாலிபர்டன்**

**ஹவுஸ்டன்:** அமெரிக்க அரசின் பாதுகாப்பு அமைச்சரான டிக் செனியின் பழைய கம்பெனி இது. மத்திய ஆசியாவில் அமெரிக்க இராணுவத் தளங்களையும் சிறைக் கொட்டடிகளையும் சத்தம் போடாமல் இப்போது அமைத்துக் கொண்டிருக்கிறது. செனி அங்கு வேலை செய்தபோதுதான் ஹாலிபர்டன் நிறுவனம் ஈராக்கின் பென்டகனுக்கு கடற்படைத் தளவாடங்கள் விற்கும் முதல்பெரும் ஒப்பந்தத்தைப் பெற்றது; இரண்டாவது வளைகுடாப் போரின் போதும், போருக்குப் பிறகு மறுசீரமைத்துத் தளவாடம் பெற்றுப் புதுப்பிக்கவும் அமெரிக்கப் படைகளுக்கு ஏராளமான துணை - உதவி ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொள்ளை லாபம் அடித்தது.

**18 . கார்னகி மெல்லன் பல்கலைக்கழகம்**

**பிட்ஸ்பர்க்:** கம்ப்யூட்டர் விஞ்ஞானத்துக்கே முதலிடம் என்று பீற்றிக் கொள்ளும் இக்கம்பெனி பற்றி **இந்தியா டுடே**யில் ஒவ்வொரு இதழிலும் பக்கம்பக்கமாக விளம்பரங்களைப் படித்திருப்பீர்கள். இராணுவத் தளவாடங்கள் தயாரித்துச் சாவு வியாபாரம் செய்வதிலும் முன்னணியில் நிற்கிறது 'கார்னகி''. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் இராணுவப் பணம் 35 கோடி டாலர் (சுமார் 2000 கோடி ரூபாய்) லாபமடித்தது கார்னகி.

**19. ஜனாதிபதி ஜார்ஜ் எச். டபிள்யூ. புஷ்**

**கென்னி பங்க் துறைமுகம்:** கிரிமினல் ஜனாதிபதி வாழும் பகுதி. பனிரெண்டு ஆண்டுகளுக்கு மேல் தொடரும் ஈராக் போரைத் தொடங்கி வைத்தவன் - அப்போரில் 10 லட்சம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டார்கள்; 1989 பனாமா மக்கள் பல ஆயிரம் பேர் கொல்லப் பட்டதற்கும் இவனே காரணம்; 1970-ஆம் ஆண்டுகளில் சி.ஐ.ஏ. தலைவனாகவும் இருந்து சதி, நாசவேலைகளில் ஈடுபட்டவனும் இந்த முதல் குடிமகன்தான்.

**20. டின் கார்ப்**

**ரேஸ்டோன்:** குவெட்டாரில் அமெரிக்க இராணுவத் தளத்தைப் பாதுகாக்கும் தனியார் நிறுவனம். ''இதன் பால்கன் கிளையில் பெண்கள், சின்னஞ் சிறுமிகளை விலைமாதர்களாக்கிப் பிறகு சந்தையிலும் விற்றுக் காசு பார்க்கிறார்கள்'' என்று அந்த விபச்சார சிண்டிகேட்டுக்களையும் அக்கயவர்களையும் தற்போது அம்பலப்படுத்தி உள்ளார்கள் குவெட்டார்க் கிளை ஊழியர்கள் இருவர்.

**21. வெள்ளை மாளிகையின் போர்க் கிரிமினல்கள்**

**எலியட் அப்ராம்ஸ்:** மத்திய அமெரிக்காவின் எண்பதாம் ஆண்டு களில் எதிர்ப் புரட்சி கான்ட்ராஸ்களுக்கு நிதிஉதவி செய்தவன்; ஈரான் - கான்ட்ராஸ் விவகாரத்தில் அவனது கிரிமினல் நடவடிக்கைகளுக்காகச் சிறைப்பட்டவன். ஆனால் பிறகு தேசியப் பாதுகாப்புக் கழகத்தின் மூத்த ஆலோசகனாக்கப்பட்டான்.

**காலின் பாவல்:** பனாமா, ஈராக் மீதான தாக்குதலில் பிரதான பாத்திரம் வகித்தவன். வியத்நாம் போரில் மைலாய் என்ற இடத்தில் பெண்கள், குழந்தைகள்... முதியவர், நோயாளிகள் என்று அப்பாவிகளான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஈவிரக்கமற்ற இப்படுகொலையை மூடி மறைத்தவன் இவன். இதற்குப் பரிசாக ஜனாதிபதிக்குச் சமமான செல்வாக்கை, அரசுச் செயலராக இருந்து இன்று அனுபவிக்கிறான்.

**டொனால்டு ரம்ஸ்பீல்டு:** 1983-இல் ஈரானுக்கு எதிராக ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்த ஈராக்கைத் தூண்டியவன்; நவம்பர் 2001-இல் ஆப்கானிஸ்தானில் நிராயுதபாணிகளான தலிபான் கைதிகள் மீது குண்டுமழை பொழிந்து பல நூற்றுக் கணக்கானவரைக் கொலை செய்தவன்.

**22. இரசாயன ஆயுதங்களைக் குப்பையாய்க் கொட்டுவது**

**நியூயார்க்:** கடற்கரை ஓரமாக 150 மைல் தொலைவில் அட்லாண்டிக் கடலில் மொத்தம் 51,180 (நரம்புகளை இழுக்க வைக்கும்) விஷவாயு ராக்கெட்டுக்கள் கடந்த '67-68' முதலே கொட்டப்பட்டு வருகின்றன. அமெரிக்க தளவாடங்கள் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் ஆய்வின் படியே, மொத்தம் ஒரு லட்சம் டன் ரசாயன ஆயுதங்கள் உலகெங்கும் உள்ள கடல் பகுதிகளுக்குள் 60 இடங்களில் கொட்டப்பட்டு வருகின்றன. மெக்சிகோ வளைகுடா, நியூஜெர்ஸி கடற்கரை, கலிபோர்னியா, தெற்கு கரோலினா, இந்தியா அருகே, இத்தாலி, நார்வே, டென்மார்க், ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் உள்ள கடல் பகுதிகளே அவை. தரைவழி மட்டுமல்ல, கடல் வழிக்குள்ளேயும் நஞ்சினை நிரப்பி விட்டது அமெரிக்கா.

**23. சர்வதேச போலீசு அகாதமி**

**வாஷிங்டன்:** ''சித்திரவதைக்காரர்களின் பள்ளி '' என்று அழைப்பார்கள்; சிஐஏ நடத்துகிறது; வேவு, ஊடுருவி அழிப்பு - கலகம் செய்வது, வஞ்சகக்கொலைகளை நடத்துவது, சித்திரவதைகள் - ஆகிய 'பல கலைகளை' அயல்நாட்டுப் போலீசுக்குச் சொல்லித் தரும் பள்ளி. பலத்த எதிர்ப்பு கிளம்பியதால் 1975-இல் அதிகார பூர்வமாக மூடப்பட்டாலும், வேறு பெயர்களில் செயல்பட்டு வருகிறது. ஆண்டுக்கு 50 கோடி டாலர் பணம் இதற்காகவே ஒதுக்கப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# அன்பே சிவம்: சி.பி.எம்-இன் திரை அவதாரம்

**அன்பே சிவம்** திரைப்படத்தில் பிரளயனின் வீதி நாடகக்குழு இருக்கிறது; தொழிலாளிகளின் சம்பள உயர்வுக் கோரிக்கை இருக்கிறது; செங்கொடி இருக்கிறது; சி.ஐ.டி.யு.வின் அறிவிப்புப் பலகையே இருக்கிறது; பன்னாட்டு நிறுவனங்களைத் தாக்கும் வசனங்கள் இருக்கின்றன; மொத்தத்தில் மார்க்சிஸ்டு கட்சியினர் மனக்கிளர்ச்சியடைந்து தியேட்டர் வாசலில் தோரணம் கட்டுவதற்கான எல்லா சாத்தியக் கூறுகளும் படத்தில் இருக்கின்றன.

இருந்த போதிலும் வெள்ளித்திரையில் சிவப்புநிறம் தெரிவதாகக் கேள்விப்பட்டு விரைந்து, சினிமாக் கொட்டகையில் 40,50 அபராதம் கட்டிய ரசிகர்களுக்கு ''கமலஹாசன் என்ன சொல்ல வருகிறார்'' என்ற குழப்பமும் இருக்கிறது.

மார்க்சிஸ்டு கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினர் சீதாராம் யெச்சூரி இந்தப் படத்தைப் பாராட்டியிருப்பதிலோ, *தீக்கதிர்* உச்சிமோந்திருப்பதிலோ நமக்கு வியப்பில்லை. பா.ஜ.க. தலைவர் இல. கணேசனும் இதைப் பாராட்டியிருக்கிறார் என்பதுதான் இதில் சுவையான செய்தி. செங்கொடியும், சி.ஐ.டி.யு. பலகையும் தெளிவாகக் காண்பிக்கப்பட்ட பிறகும் இல. கணேசன் பாராட்டுகிறாரென்றால், ஏமாந்தது யார் என்று நமக்குத் தெரிந்தாக வேண்டும்.

**ந**ல்லசிவம் (கமல்) எனும் விகாரமான தோற்றம் கொண்ட மார்க்சியவாதி, அன்பரசு (மாதவன்) எனும் அழகான, அமெரிக்காவில் படித்த, செல்போன் பிடித்த, ஜீன்ஸ் போட்ட இளைஞனை புவனேசுவர் விமான நிலையத்தில் சந்திக்கிறான். தன்னுடைய தமிழ்ப் பெயரையே இழிவாகக் கருதி ஏ.அர்ஸ். என்று சுருக்கிக் கூறிக் கொள்ளும் அளவு தீவிரமான அமெரிக்க மோகியான அன்பரசு, நல்லசிவத்தைத் தீவிரவாதியென்று சந்தேகித்து போலீசிடம் போட்டுக் கொடுத்து, இல்லையென்று நிரூபணமானதால் அவமானப்படுகிறான்; கொஞ்சம் 'குற்றவுணர்வும்' அடைகிறான்.

புவனேசுவரிலிருந்து சென்னை நோக்கிய நான்கு நாள் பயணத்தில் இந்தச் சின்ன குற்றவுணர்வைக் கொஞ்சம் கொஞ்சமாக நோண்டிப் பெரிதாக்குகிறான் நல்லசிவம். கிரெடிட் கார்டும், வெளிநாட்டு ஷூவும், நுனி நாக்கு ஆங்கிலமும் செல்லுபடியாகாத உண்மையான இந்தியாவை அந்த அமெரிக்கக் குஞ்சுக்கு அறிமுகம் செய்கிறான். அந்த இளைஞனின் இதயத்திலும் பெயரிலும் 'இயற்கையாகவே' குடி கொண்டிருக்கும் 'அன்பை', அதாவது கடவுளை, சாமர்த்தியமாகத் துழாவி வெளியே எடுத்து அவனுக்கே அறிமுகப்படுத்தியும் விடுகிறான்.

புவனேசுவரிலிருந்து சென்னைக்கு முன்னோக்கிச் செல்லும் இந்தப் பயணத்தினூடாக, நல்லசிவம் தன் நினைவுகளில் பின்னோக்கிச் செல்லும் பயணமும் வருகிறது. வீதி நாடகக் கலைஞனும், மார்க்சியவாதியும், ஓவியனும், கணினி விற்பன்னனுமான நல்லசிவத்தைக் கண்டு - அதாவது அவனிடம் பொதிந்துள்ள சராசரித் தொழிலாளியின் சக்திக்கு அப்பாற்பட்ட 'திறமை'யைக் கண்டு மயங்கி அவனைக் காதலிக்கிறாள் முதலாளியின் மகள். எதிர்பாராத விபத்து அவர்களைப் பிரிக்கிறது.

சிவத்தின் (நல்லசிவத்தின்) காதலி அன்புக்கு (அன்பரசுவுக்கு) மனைவியாகிறாள். தொழிலாளர்கள் தமது சொந்த தியாகத்தால் வாங்க முடியாத கூலி உயர்வை, தனது காதலைத் தியாகம் செய்து அவர்களுக்கு வாங்கி வழங்கி விட்டு, ஒரு சித்தரைப் போலத் தெரு நாயுடன் நடந்து மறைகிறான் நல்லசிவம்.

கதையின் தர்க்கரீதியான தொடர்ச்சியில் விழும் ஓட்டைகளை ஒதுக்கி விட்டு மையக்கருத்துக்குச் செல்வோம்.

படம் உலகமயமாக்கத்துக்கெதிராகப் பேசுகிறதா? ஆம், என்கிறார் கமலஹாசன். வீதி நாடகத்திலும், மாதவனிடம் கமல் பேசும் வசனங்களிலும் ஆங்காங்கே தூவப்பட்டிருக்கும் வசனங்களை வைத்து அத்தகைய பிரமை சிலருக்குத் தோன்றக்கூடும்.

சரி, உலகமயமாக்கலை எதிர்த்து இந்தப் படம் யாரிடம் பேசுகிறது? என்ன பேசுகிறது? இந்தக் கொள்கைகளினால் ஆதாயமடைகின்ற வர்க்கத்தின் பிரதிநிதியிடம் பேசுகிறது. கணினி வல்லுனர்களாகவும், பொறியாளர்களாகவும், சேவைத் துறையினராகவும் வேலை செய்கின்ற நுனி நாக்கு ஆங்கிலப் பேர்வழிகளிடம், அமெரிக்காவுக்கு ஓடுவதற்கு சந்தர்ப்



பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பெப்சி மாதவன்களிடம் பேசுகிறது.

''சோற்றுக்குப் போராடும் இந்தத் தேசத்தைப் பாருங்கள். மக்களைப் பாருங்கள். மனமிரங்குங்கள். அறவுணர்வு கொள்ளுங்கள்'' என்ற அவர்களிடம் மன்றாடுகிறது. அவ்வப்போது நல்லசிவத்தின் சாமர்த்தியமான வசனங்களால் அவர்களை மடக்குகிறது. லேசாக இடித்துரைக்கிறது.

பிறப்பால் இந்தியனாகவும் சிந்தனையால் அமெரிக்க அடிவருடியாகவும் வளர்ந்துள்ள **''யுப்பி''** என்றழைக்கப்படும் நவீன மேட்டுக்குடி வர்க்கத்தின் பிரதிநிதியாகத் திரையில் தோன்றுகிறார் மாதவன். இந்த வர்க்கம் அறவுணர்வற்றுப் (Amoral) போனதற்குக் காரணமென்ன என்பது நமது முதல் கேள்வி.

உலகப் புகழ் பெற்ற பங்குச் சந்தைச் சூதாடியான ஜார்ஜ் சோரோஸ் எனும் கிழவனிடம் அவனுடைய ஒழுக்கம், அறவுணர்வு பற்றிய கேள்விகளை எழுப்பிய போது ''சந்தைக்கு அறவுணர்வு இல்லை; எனவே எனக்கும் இல்லை'' என்று பதிலளித்தானாம். அந்தக் கிழட்டுப் போக்கிரியின் வாயிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு சொல்லும் உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

பன்னாட்டு நிறுவனங்கள் உலகச் சந்தையைக் கைப்பற்ற எத்தகைய 'நெறி களைக்' கடைப்பிடிக்கின்றனவோ அவற்றின் பிரதிபலிப்பைத்தான் நாம் இந்த யுப்பி வர்க்கத்திடம் காணமுடியும். ஏனென்றால் இவர்கள் அதன் ஊழி யர்கள், தரகர்கள், துதிபாடிகள் அல்லது நல்லசிவத்தின் மொழியில் சொன்னால் எலும்பைக் கவ்வக் காத்திருக்கும் கூலிகள்.

அவ்வாறிருக்க, நிஜத்தின் தலையைச் சீவுவதைத் தந்திரமாகத் தவிர்த்துவிட்டு, நிழலுக்கு முடிவெட்டி அழகுபடுத்த முனைகிறார் நல்லசிவம்.

அன்பரசுவின் (மாதவனின்) வர்க்கத்தைப் பொறுத்தவரை முதலாளித் துவ உலகச் சந்தைதான் அவர்களது கடவுள். சந்தையின் விதிகள்தான் இறை வனின் பத்து கட்டளைகள். இந்த ஆட்டத்தில் வெல்லும்போது அதைத் தனது திறமைக்கும், புத்திக் கூர்மைக்கும் கிடைத்த வெற்றியாக அவர்கள் கருதிக் கொள்கிறார்கள். இதில் தோற்று மடிபவர் களைக் குறித்து அவர்கள் வருத்தம் கொள்வதில்லை.

சூறாவளியில் பிடுங்கியெறியப்பட்ட தென்னை மரத்துக்காக இவர்கள் எப்படிக் கண்ணீர் விடமாட்டார்களோ, அவ்வாறே உலகமயமாக்கத்தால் பிடுங்கி எறியப் பட்டுச் செத்து மடிகின்ற விவசாயிகளுக் காகவும் இவர்கள் கண்ணீர் விடுவ தில்லை.

''சோமாலியா முதல் தஞ்சை வரையி லான பட்டினிச் சாவுகளுக்கும் தற்கொ லைகளுக்கும் காரணம் நம்மால் முன்ன றிந்து சொல்ல முடியாத சந்தையின் விதி கள்தான்'' என்று கூறும் உலக முதலாளித் துவத்திடம் இந்தச் சாவுகளுக்கான தார்மீகப் பொறுப்புணர்ச்சியை எப்படி எதிர்பார்க்க முடியாதோ, அவ்வாறே இந்த யுப்பி வர்க்கத்திடமும் அதை எதிர் பார்க்க முடியாது. ''பட்டினிச் சாவா அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்று அவர்கள் தோளைக் குலுக்கு வார்கள். அவ்வளவுதான்.

ஆனால் எல்லா மனிதர்களுக் குள்ளும் ஒரு அன்பு ஊற்று இருப்பதா கவும் ஏதோ சில காரணங்களால் அது அடைபட்டிருந்தாலும் அதைத் தோண்டியோ, நோண்டியோ வெளியே கொண்டு வந்து விட முடியுமென்றும் நம்மை நம்பச் சொல்கிறார் கமலஹாசன். இந்த பார்முலாவின்படி மாதவனுக்குள் இருக்கும் 'கடவுளை' நாலே நாளில் தோண்டி எடுத்து விடுகிறார்.

எல்லோருக்குள்ளும் ஒரு நடுநிலை யான மனச்சாட்சி (கடவுள்) இருப்பதா கவும், அந்த மனச்சாட்சிக்கு விரோதமாக சிலர் நடந்து கொள்கின்ற காரணத்தி னால்தான் சமூகத்தில் இத்தனை அநீதிகள் நிகழ்கின்றனவென்றும், எல்லோரும் மனச்சாட்சிப்படி நடந்து கொள்ளத் தொடங்கி விட்டால் உலகமே அன்புமய மாகிவிடும் என்றும் கருதுகின்ற பிரபல மான மூடநம்பிக்கையை வேறு வார்த்தை களில் விற்பனை செய்கிறார் கமல ஹாசன்.

மனச்சாட்சி என்பது என்ன? அது சமூக விதிமுறைகள் குறித்தும், தனிப் பட்ட ஒழுக்கம் குறித்தும் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் உருவாக்கி வைத்தி ருக்கும் (அல்லது உருவாக்கியவண்ணமி ருக்கும்) ஒரு கையேடு. எந்த முதலா ளியும் தன் மனச்சாட்சிக்கு விரோதமாக தொழிலாளியைச் சுரண்டுவதில்லை; மனச்சாட்சிப்படிதான் சுரண்டுகிறான். இந்திய மக்களின் வரிப்பணத்தில் ஐ.ஐ.டி.யில் படித்துத் தேறிய யுப்பி வர்க்கம் ''இந்த நாட்டில் என் திறமைக்கு மரியாதை இல்லை'' என்று திட்டிவிட்டு விமானமேறும்போதும் அதுதன் மனச் சாட்சிப்படிதான் நடந்து கொள்கிறது.

சாதி இந்துக்களின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்புவதாகவும், குற்றவு ணர்வை உசுப்புவதாகவும் கூறிவந்த காந்தியின் பசப்பல்களை இதனால்தான் அம்பேத்கர் ஏற்கவில்லை. அரியானா முதல் மேலவளவு வரை 'சாதி இந்து மனச்சாட்சி' அன்றாடம் தன்னை நிரூ பித்துக் கொண்டிருக்கிறது.

தீண்டாமை அல்லது மறுகாலனி யாக்கம் போன்ற சமூக, அரசியல் அநீ திகள் (சமூக) அறிவியலின் துணை கொண்டு ஆராயப்பட வேண்டியவை. இவற்றை அறம் சார்ந்த பிரச்சினையாக சுருக்குவதும், திசைதிருப்புவதும் முதலா ளித்துவக் கலைஞர்கள் வழக்கமாக நடத் திவரும் கழைக்கூத்து. பெப்சி மாதவன் வர்க்கத்திடம் ''அறம் செய விரும்பு'' எனப் போதிக்கிறார் நல்லசிவம்.

**உலகமயமாக்கத்தைச் சாடுவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு திரைப்படம், அதை உண்மையிலேயே எதிர்த்துப் போராடக் கூடிய உழைக்கும் வர்க்கத்தையோ அதன் பிரதிநிதியையோ மையமான பாத்திரமாகத் தெரிவு செய்யவில்லை.**

மாதவனின் வர்க்கத்தைப் ''பன்னாட்டு நிறுவனத்தின் கூலி'' என்று நல்லசிவம் சாடுகிறார். ஒண்ணாம் நம்பர் கைக்கூலிக் கட்சியான பாரதிய ஜன தாவின் தலைவர் இல. கணேசனோ படத்தைப் பாராட்டுகிறார்.

விசாரித்துப் பாருங்கள்! உலகமய மாக்கம் குறித்து தனது கவலையை அவரும் வெளியிடுவார். ''நமது கலாச் சாரம், தர்மங்கள், குடும்ப உறவுகள் ஆகி யவற்றைப் பலி கொடுத்து விடக்கூடாது'' என்பதே உலகமயம் குறித்த அவரது கவலை. அறம் சார்ந்த கவலை!

மார்க்சிஸ்டு கட்சியின் தூண்களான வங்கி, காப்பீடு, பொதுத்துறை ஊழியர் சங்க முன்னோடிகளிடம் பேசிப் பாருங்கள். பையனுக்கு விசா கிடைக்காத கவலையை நெஞ்சில் தேக்கியபடியே மேற்படி அறம் சார்ந்த கவலையையும் வெளியிடுவார்கள். இதே வகைப்பட்ட அறம் சார்ந்த கவலைதான் சிலிகான் வேலி பையனுக்குச் சீரங்கத்தில் பெண் தேடுகிறது.

இவர்களது ஆன்மாவின் குரல் ஓவியர் மதனின் வசனமாகத் திரையில் சிந்துகிறது. கலப்புப் பொருளாதாரத்தின் ஆதாயங்களை அனுபவித்த மனிதனின் வர்க்கம், புதிய பொருளாதாரத்தால் தத்தெடுக்கப்பட்ட தன்னுடைய பிள்ளை களைப் பார்த்துச் செல்லமாகக் கடிந்து கொள்கிறது. தங்கள் புத்திரர்களான யுப்பி வர்க்கம் கையில் தீவட்டியுடன் திரிந் தாலும் ''அவர்கள் அடிப்படையில் நல்ல வர்கள்தான்'' என்று நம்மை நம்பச் சொல்கிறது.

''ரத்ததானம் கொடு, ஏழைகளுக்குச் சின்ன உதவி செய், இரண்டு சொட்டுக் கண்ணீர் விடு - முடிந்தது கதை. நீதான் கடவுள்'' என்று மாதவனைத் தயார்ப் படுத்துகிறார் கமலஹாசன். மஞ்சள், வேப்பங்கொட்டை, பாசுமதி, எம்.என்.சி., எலும்புத்துண்டு... என்று தன் அறிவின் மேன்மையை மாதவன் மீது நிலைநாட்டுகிறார். பட்டினத்துக் கதா நாயகியைப் பட்டிக்காட்டுக் கதாநாயகன் சீண்டுவதுபோலக் கொஞ்சம் சீண்டு கிறார். இப்படியாக யுப்பி வர்க்கத்தின் பிரதிநிதியிடம் குற்றவுணர்வு தோற்று விக்கப்பட்டு விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ச்சினிமாவில் குற்றவுணர்வுக்கு ஆளாகின்ற பாத்திரம் அதை சென்டிமெண்டு மூலம் நிரூபிக்க வேண்டும் என்பது விதி. மாதவன் நிரூபிக்கிறார்; தோழர் நல்லசிவம் அண்ணன் நல்லசிவமாகிறார். யுப்பி வர்க்கத்தின் பிரதிநிதிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் 'பிரதிநிதி'க்குமிடையிலான உறவு அண்ணன்-தம்பி உறவுதானென்று திரைக்கதையின்படியே நிரூபணமாகிறது.

நல்லசிவத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையிலான உறவு என்ன? ''நல்லசிவம் நாடகம் போட்டால் தொழிலாளிகள் வேடிக்கை பார்ப்பார்கள்; நல்லசிவத்தை முதலாளி ஆள் வைத்து அடித்தால் அதையும் வேடிக்கை பார்ப்பார்கள்; மற்றப்படி சம்பளம் 910ஐ, 920 ஆக்க வேண்டுமென்றால் அவர்களுக்குப் புரியும். 'முதலாளி நாசர்தான் எதிரி' என்று தாடி வைத்து டான்ஸ் ஆடிக் காட்டினால் புரியும். தொழிலாளர் தலைவர் முதலாளி மகளை ஏன் காதலிக்கிறார் என்று கேட்கக் கூடத் தெரியாது. மற்றப்படி உலகமயமாக்கம், அமெரிக்கா, ஜப்பான் இதெல்லாம் புரியாது. சொல்ல வேண்டியது நம் கடமை என்பதால் நாலு வார்த்தை சொல்லி வைப்போம்'' - இதுதான் தொழிலாளி வர்க்கத்தின் பால் நல்லசிவத்தின் அணுகுமுறை.

''ஏனென்றால் கதையில் அவர்கள் இல்லை'' என்ற வழக்கமான கோடம்பாக்கம் பதில் நம் காதில் விழுகிறது. ''எடுத்த கதையைப் பற்றிப் பேசு; எடுக்காத கதையைப் பற்றிப் பேசாதே'' என்ற எச்சரிக்கைக் குரலும் கேட்கிறது.

**களத்தில் நிற்கும் அடிப்படை உழைக்கும் வர்க்கத்துக்கு தீக்கதிர் சார்பில் தீபாவளி மலர், திருவண்ணாமலை தீபம் சிறப்பிதழ்; தொழிலாளி வர்க்கம் தன் அன்றாட வாழ்வில், கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கு வழி காட்ட தீக்கதிர் நாட்காட்டி, அதில் இந்து, கிறித்தவ, இசுலாமியப் பண்டிகைகளின் பட்டியல், ராகு காலம், எமகண்டம், குளிகை, சூலம் இன்னபிற... இன்னபிற...**

இருந்தாலும் ''உலகமயமாக்கத்துக்கு எதிரானது'' என்று கூறிக் கொள்ளப்படும் திரைப்படத்தில், அதனால் பாதிக்கப்பட்ட வர்க்கம், அதை எதிர்த்துப் போராட வேண்டிய வர்க்கம் ஏன் செவிடாகவும் ஊமையாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது என்று கேட்காமலிருக்க முடியாது.

உலகமயமாக்கலின் விளைவாகப் பட்டினிச் சாவுக்கும், நோய்க்கும், வேலையின்மைக்கும், தற்கொலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்ற நாட்டின் 90 சதவீத மக்கள், தங்களுடைய தலைவிதி எங்கே, யாரால், எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்று அறியாமல் இருக்கிறார்களே, அதுதான் இன்றைய அவலம். குடிநீருக்குத் தவமிருக்கும் பெண்கள் பெப்சி கடைகளை நொறுக்கத் தொடங்கினால், பட்டினியில் வாடும் விவசாயி மெக்டொனால்ட்ஸ் கடையை இனம் கண்டு சூறையாடினால், தற்கொலை செய்து கொள்ளும் பருத்தி விவசாயி அமெரிக்க ஜீன்ஸ் கடைகளுக்குத் தீ வைத்தால்... அப்போது யுப்பி வர்க்கம் 'எனக்கென்ன' என்று தோளைக் குலுக்காது. ஒவ்வொரு மாதவனாகத் தேடிப் பிடித்து அவர்களுடைய அறவுணர்வை உசுப்பிவிடும் சிரமமும் நல்லசிவத்துக்கு இருக்காது. இதயத்தில் 'கடவுள்' உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்று அந்த வர்க்கம்தானே இரண்டாகப் பிளந்துவிடும்.

அல்லாமல் அந்த வர்க்கத்தின் அறவுணர்வை வேண்டி மன்றாடி நின்றால், கஞ்சித் தொட்டி, உண்டைக்கட்டி அல்லது பிச்சையிடுதல் மூலம்தான் அது தன் அறவுணர்வை வெளிப்படுத்தும். ஒரு வர்க்கம் என்ற முறையில் அதன் மனநிலையும் சிந்தனை முறையும் இதுதான். அந்த வர்க்கத்திலிருந்து நீங்கிய சிலர் இருக்கலாம். ஆனால் மாதவன் அவ்வாறு நீங்கியவர்களின் பிரதிநிதி அல்ல; அந்த வர்க்கத்தின் பிரதிநிதி.

உலகமயமாக்கத்தைச் சாடுவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு திரைப்படம், அதை உண்மையிலேயே எதிர்த்துப் போராடக் கூடிய உழைக்கும் வர்க்கத்தையோ அதன் பிரதிநிதியையோ மையமா'ன பாத்திரமாகத் தெரிவு செய்யவில்லை. மாறாக உலகமயத்தால் ஆதாயமடைகிற, அதை ஆதரிக்கிற ஒரு விளம்பர சினிமாத் தயாரிப்பாளனை, அதாவது யுப்பி வர்க்கப் பிரதிநிதியை வம்படியாக இழுத்து வைத்துக் கொண்டு அவனிடம் மூச்சைக் கொடுக்கிறது; அவன் மீது தன் மேதாவிலாசத்தைப் பொழிகிறது.

தொழிலாளி வர்க்கத்தின்பால் மார்க்சிஸ்டு கட்சியின் அணுகுமுறையும்

# அடையாளம்

அடையாளம் தெரியாத பிணங்கள்
அதிகரித்து விட்டன.
அதனாலென்ன
ஆளைக் கொன்று விடலாம்
பிறகு அடையாளம்
சொல்லிக் கொள்ளலாம்.

செத்தவன் வாயில்
உருது மொழியைத் திணித்து விட்டால்
அவன் ஐ.எஸ்.ஐ. உளவாளி;
செத்தவன் பையில்
ஒரு நோட்டீசை நுழைத்து விட்டால்
அவன் தேசவிரோதி.

எரிப்பதற்கு அவசியம் இல்லாமல்
தெருவில் கிடக்கும் பிணத்துக்கு
அடையாளம் வேண்டுமா உங்களுக்கு ?
அது திருவாரூர் விவசாயி;
இல்லையேல் ஈரோட்டில் நெசவாளி.

தேசத்தின் பாதுகாப்பு கருதி
யாரையும்
விசாரித்துக் கொண்டிருக்க முடியாது
வேண்டுமானால்
விழுந்து கிடக்கும் பிணங்களை
அடையாளம் சொல்லிப் பெற்றுக்
கொள்பவர்களுக்கு
உதவி செய்ய அரசு தயார்.

அரசாங்கம்
தேசத்தைப் பாதுகாக்க வேண்டும்.
விவசாயிகளே,
விவசாயத்தை விட்டு ஓடி விடுங்கள்.
தொழிலாளிகளே,
ஆலைகளை விட்டு ஓடுங்கள்.
அரசு ஊழியர்களே,
நாற்காலியை விட்டு நகருங்கள்.
முடிந்தால்
தேசத்தை விட்டே ஓடுங்கள்.
முடியாவிட்டால்
உலகத்தைவிட்டே போங்கள்.

உங்கள் அத்தனைப் பேரையும்
ஒரே நாளில்
எங்களால் கொல்ல முடியாது –
அரசியல் காரணங்களுக்காக

எனவே,
குடும்ப காரணங்களுக்காக
கொஞ்சம், கொஞ்சமாக
செத்துப் போங்கள்

தேசத்தைப் பாதுகாக்க,
இந்த அரசு எதையும் தியாகம் செய்யும்.

● துரை. சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com

இதுதான். ''போனஸ், கூலி உயர்வு, சூரியன், இரட்டை இலை தவிர வேறெதுவும் மக்களுக்குப் புரியாது, புரியத் தேவையில்லை'' என்பது அவர்கள் கருத்து.

சமீபத்தில் மாணவர் போராட்டத்தின் போது ''உலக வர்த்தகக் கழகத்தின் ஆணைப்படிதான் கல்லூரிகள் தனியார் மயமாக்கப்படுகின்றன'' என்ற விசயத்தை மாணவர்களுக்கு விளக்கத் தேவையில்லை என்பதே அவர்களுடைய கருத்தாக இருந்தது. ஏனென்றால் அதெல்லாம் மாணவனுக்குப் புரியாதாம். ''கட்டணம் உயரும் என்ற ஒரு விசயம்தான் மாணவர்களின் அறிவுக்கு எட்டும்'' என்பது அவர்களது முடிவு.

எனில், அரசியல், பொருளாதாரம், தத்துவம் எல்லாம் யாருக்கு? அது ஆங்கிலம் படிக்கத் தெரிந்த மேட்டுக்குடிகளுக்கு. பிள்ளைகளை அமெரிக்காவுக்கு அனுப்பிய மற்றும் அனுப்ப விரும்புகிற வர்க்கத்திற்கு உலகமயமாக்கம் குறித்த தத்துவஞான உபதேசம்! அன்றாட வாழ்வில் பார்ப்பனியச் சாதிய சடங்கு சம்பிரதாயங்களை எதிர்த்துப் போராட முனையாத எல்.ஐ.சி. வர்க்கத்துக்கு வரலாற்றில் பார்ப்பனமயமாக்கம், பூகோளகத்தில் சமஸ்கிருதமயமாக்கம் குறித்த ஆங்கில ஆய்வுக் கட்டுரைகள், கருத்தரங்குகள்.

களத்தில் நிற்கும் அடிப்படை உழைக்கும் வர்க்கத்துக்கு *தீக்கதிர்* சார்பில் தீபாவளி மலர், திருவண்ணாமலை தீபம் சிறப்பிதழ்; தொழிலாளி வர்க்கம் தன் அன்றாட வாழ்வில், கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கு வழிகாட்ட தீக்கதிர் நாட்காட்டி, அதில் இந்து, கிறித்தவ, இசுலாமியப் பண்டிகைகளின் பட்டியல், ராகு காலம், எமகண்டம், குளிகை, சூலம் இன்னபிற... இன்னபிற...

இது இரட்டை அணுகுமுறை மட்டுமல்ல, இரட்டை வேடம்! மார்க்சிஸ்டு கட்சியின் இந்த அரசியல் இரட்டை வேடத்தை அறம் சார்ந்த இரட்டை வேடமாக வெளிப்படுத்துகிறான் நல்லசிவம்.

நண்பர் மதன் தன்னை விருந்துக்கு அழைத்த இடம் முதலாளியின் வீடு என்று தெரிந்த பின்னரும் உள்ளே நுழைகிறான். (இதிலென்ன தப்பு தோழரே, நாம பேச்சு வார்த்தைக்கு முதலாளி வீட்டுக்கு போறதில்லையா, அறிவொளி இயக்கத் தோழர்கள் கலெக்டர் விருந்துல கலந்துக்கிறதில்லையா?)

முதலாளியின் மகள் கைதவறிச் சிந்திய ஐஸ்கிரீமினால் கோலம் போட்டுக் காட்டிப் பாராட்டைப் பெறுகிறார். (நம்ம எழுத்தாளர்கள் குமுதத்தில் போட்டிக் கதை எழுதிப் பரிசு வாங்குறதில்லையா?)

அவள் 'சாரி' என்று சொன்ன 30 நொடிகளில் காதல் வயப்படுகிறார். (பி.ஜே.பி.யை ஆதரிச்சதுக்கு 'சாரி'ன்னு ஜெயலலிதா சொன்னவுடனே நாம கூட்டணி வச்சுக்கிறலயா?)

இப்படி ஒரு பட்டியல் போடலாம். அன்பரசுவுக்கு அடுத்து நல்லசிவத்துடன் உறவு வைக்கும் முக்கியப் பாத்திரம் அவன் காதலி - அதாவது முதலாளியின் மகள். ''தொழிலாளிகளுக்கெதிராக முதலாளி (காதலியின் அப்பா) செய்யும் சதியை அவளை வைத்தே வேவு பார்க்கலாம்'' என்று ஒரு தொழிற்சங்கத் தோழர் கூறியவுடனே அதை நிராகரிக்கிறான் நல்லசிவம். இதற்கு அவன் கூறும் காரணம்: தன் காதலி நேர்மையானவள்; இரண்டாவது காரணம்: இது நேர்மையற்ற வழிமுறை.



''தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தை முதலாளி வர்க்கம் கூறிக்கொள்ளும் அறநெறிகளின்படி நடத்த வேண்டும்'' என்று இலக்கணம் வகுக்கும் நபரைக் கடந்த காலத்தில் தேடினால் காந்தியிடம் பார்க்கலாம்; நிகழ்காலத்தில் அந்த தார்மீக ஆவேசத்தை சோம்நாத் சாட்டர்ஜியிடம் பார்க்கலாம்.

'புனிதமான' அரசியல் சட்டத்தின் மீதும் அது எழுந்தருளியுள்ள பாராளுமன்றக் கருவறையின் மீதும் சங்க பரிவாரத்தினர் காலைத் தூக்கி அலட்சியமாக ஒன்னுக்கடிக்கும்போது, சாட்டர்ஜியின் முகத்தில் ஒளிரும் தார்மீக ஆவேசத்தையும், வாஜ்பாயிடம் நீதி கேட்கும்போது துடிக்கும் அவருடைய உதடுகளையும் யாருக்கும் சொல்லிப் புரிய வைக்க முடியாது.

பாத்திரங்களை மிக நுட்பமாக ஆய்வு செய்து தனது நடிப்புக்கு மெருகேற்றிக் கொள்ளும் கமலஹாசன் இந்தக் காட்சியைப் படமாக்குமுன் சிறிது நேரம் தூரதர்சன் நேரடி ஒளிபரப்பைப் பார்த்திருந்தால் காட்சி வேறுவிதமாக மாறியிருக்கும். இப்படியொரு அறம் வழுவிய யோசனையைச் சொன்ன தோழரை ஓங்கி ஒரு அறை விட்டிருப்பான் நல்லசிவம்!

இதில் வேடிக்கை என்னவென்றால், முதலாளியின் வரவேற்பறையில் ஓவியம் வரைந்து கொடுத்துக் காசு வாங்கி தொழிற்சங்கத்துக்குப் பயன்படுத்துவதை நல்லசிவத்தின் 'அறவுணர்வு' தடுக்கவில்லை. ''கலை விலை போகலாம்; கலைஞன்தான் விலை போகக்கூடாது'' என்று அவன் சார்பாக அவனுடைய காதலி தத்துவ விளக்கம் தந்து விடுகிறாள்.

மேலும் சிவன் படத்திற்குள்ளேயே மார்க்சையும் அரிவாள் சுத்தியலையும் மட்டுமின்றி ரூ. 910-ஐயும் நல்லசிவன் புகுத்தி விடுகிறானே பாராளுமன்றத்திற்குள் 50 வருடமாகப் புரட்சியைப் புகுத்துவது போல!

*திரைப்படம் கூறவரும் கருத்து என்ன என்பது குறித்து ஆளாளுக்கு பதவுரை, பொழிப்புரை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். காட்சிகளிலிருந்தும் வசனங்களிலிருந்தும் அதைப் பொறுக்கி எடுத்துக் கோர்க்க முயன்று தோற்றுக் கொண்டிருக்கிறார்கள் ரசிகர்கள்.*

*கல்கி (9.2.03) இதழுக்கு அளித்த பேட்டியில் திரைப்படம் கூற வரும் உண்மையைக் கசக்கிப் பிழிந்து வடிகட்டி வழங்கியிருக்கிறார் கமலஹாசன்:*

***''இந்தப் படத்தில் இந்துத்துவா மீது மறைமுகமான தாக்குதலை கமல் தொடுத்திருக்கிறார் என்று சிலர் பேசுகிறார்களே?''***

*''அப்படிப் பேசுகிறவர்கள் இருந்தால் அவர்கள் மீது எனக்குக் கோபம்தான் வருகிறது. ஹே ராமில் கூடப் பூடகமாகத்தான் இருந்தது. இதில் அது கூடக் கிடையாது. அன்பே சிவம் விளம்பரத்தில் பார்த்திருப்பீர்கள். கைகளை அகலமாக விரித்திருக்கிறேன். எல்லோரும் வாங்க... யாராக இருந்தாலும் அணைத்துக் கொண்டு விடுவேன் என்பதன் அடையாளம் அது...*

*இல. கணேசன் படம் பார்த்துவிட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார். இதற்கு மேல் ஒரு நல்ல பாராட்டு இருக்க முடியாது.''*



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிஸ்டு கட்சியின் அரசியலும் அவர்களது அழகியல் ரசனையும் துல்லியமாக ஒன்றுபடும் ஒரு காட்சியும் படத்திலிருக்கிறது. கமலஹாசனைக் கொலை செய்ய முதலாளி அனுப்பும் கூலிப்பட்டாளத்தைத் தன்னந்தனியே நின்று சமாளிக்கிறார் ஹீரோ. நகைச்சுவை நடிகர்களைப் போல தோழர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். பிறகு சண்டையே நகைச்சுவை போல மாறுகிறது; ''இந்த உதை போதுமா இன்னும் கொஞ்சம் வேணுமா'' என்று முழக்கமிட்டபடியே கமலஹாசனுக்குப் பின்னே அணிவகுக்கிறார்கள் தோழர்கள்.

''இந்தப் படை போதுமா...'' என்று தி.மு.க., அ.தி.மு.க.வின் பின்னே மார்க்சிஸ்டுகள் கோஷம் போட்டுச் சென்ற காட்சிகளையும், சிரிக்கும் போராட்டம், ஒப்பாரிப் போராட்டம் என தொழிலாளி வர்க்கத்திற்கு அவர்கள் கண்டுபிடித்துத் தந்திருக்கும் போராட்ட முறைகளையும் மனதில் ஓடவிடுங்கள். அந்த அரசியல் இந்தக் காட்சியின் அழகியலுக்குக் கனகச்சிதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

படத்தில் பரிதாபத்துக்குரியவர்களாக வந்துபோகும் பாத்திரங்கள் இரண்டு. முதலாவதாக பிரளயனின் வீதி நாடகக்குழு. சகலகலா வல்லவனான ஹீரோவுக்கு அவர்கள் பக்கவாத்தியம் வாசித்திருக்கிறார்கள்.

இரண்டாவதாக நாசர். வாய்க்கு வாய் ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று சொல்லிக் கொண்டே வில்லன் வேலை செய்யும் எம்.ஆர். ராதா வகைப்பட்ட பாத்திரம் அவருக்கு. கமலஹாசன் கூறுகின்ற உலகமயமாக்க சகாப்தத்தின் வகைமாதிரி இவரல்ல. அது யார் என்பதை ஏற்கெனவே சொல்லி விட்டோம்.

பேச்சில் கடவுளும், செயலில் கயமையுமான கதாபாத்திரங்களை அண்ணாத்துரை காலத்துச் சினிமாக்களே போதிய அளவு சித்தரித்து விட்டன. ''தென்னாடுடைய சிவனே போற்றி'' என்று கூறும் இந்த முதலாளிதான் ''ஜெய் சீயாராம்'' என்று அலறும் இந்துத்துவச் சக்திகளின் வகை மாதிரி என்று கருதிக் கொண்டு சிலர் புளகாங்கிதம் அடையலாம். குஜராத் படுகொலைக்கு 'பைனான்ஸ் பண்ணியவர்கள்' என்.ஆர்.ஐ. யுப்பிகள் என்ற உலகறிந்த உண்மையை அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

இந்தச் சூட்சுமம் புரிந்த தொலைநோக்குப் பார்வை கொண்ட இல. கணேசன் படத்தைப் பாராட்டிவிட்டார். நாசர் பாத்திரத்தைக் காட்டி '''உங்களுக்குக் கோபம் வரவில்லையா?'' என்று அவரிடம் கேட்டால் ''நான் அவனில்லை'' என்று பதில் சொல்லிவிடுவார்.

இத்தகைய தொலைநோக்கில்லாத ஓட்டைவாயான இராம. கோபாலன் படத்தை எதிர்க்கிறார். ''யார் யார் சிவம்'' என்ற பாடல் காட்சியில் க்னிகா ஸ்திரி சிலுவை போடுவது மட்டும்தான் அவரை அலைக்கழித்திருக்கும்

இல. கணேசனைக் கேட்டிருந்தால் ''கிறித்தவர்கள் சேவை செய்வதை நாங்கள் மறுக்கவில்லையே. அதை வைத்து மதமாற்றம் செய்வதைத்தானே கண்டிக்கிறோம்'' என்று மிகச் சுலபமாக இந்தக் காட்சிக்குள் நுழைந்து வெளியே வந்திருப்பார்.

''மோசமான ஒரு முதலாளியை இந்து ஆன்மீகவாதியாகச் சித்தரித்ததன் மூலம் இந்துக்களின் மதஉணர்வைப் புண்படுத்தி விட்டீர்கள்'' என்று கமலஹாசனைக் குற்றம் சாட்டிப் பாருங்கள். ''நானே ஆன்மீகவாதிதான், நான்தான் கடவுள்'' என்று கண் சிமிட்டுவார் நல்ல சிவம்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, ''இந்து மதவெறி'' என்று பெயர் சொல்லிக் கண்டிக்காமல் ''கடவுளின் பெயரால் கலவரம் எதற்கு?'' என்று நைசாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினார்கள் மார்க்சிஸ்டுகள். ''எங்கள் இந்து மத உணர்வைப் புண்படுத்தி விட்டீர்கள்'' என்று குற்றம் சாட்ட முடியாமல் தவித்தார்களே ஆர்.எஸ்.எஸ். காரர்கள்! அதே உத்திதான்!

படத்தில் பாராட்டுவதற்கு எதுவுமே இல்லையா என்று நல்ல சினிமாவின் ரசிகர்கள் யாரேனும் வருத்தப்பட்டால் அவர்களுக்குக் கூறிக் கொள்கிறோம்: ''ஐயா, படத்தையே பாராட்டுகிறோம். மார்க்சிஸ்டு கட்சியின் திரை அவதாரத்தை இத்தனைத் துல்லியமாக யாரும் வழங்கியதில்லை. ஒருவேளை சி.ஐ.டி.யு.வின் அறிவிப்புப் பலகையைக் காட்டாமல் இருந்திருந்தாலும் இது மார்க்சிஸ்டு கட்சிதான் என்ற உண்மை காட்சிக்குக் காட்சி பொருத்தமான கலையம்சத்துடன் எடுத்தியம்பப்படுகிறது. அதற்காக மீண்டுமொருமுறை பாராட்டுகிறோம்.''

● மருதையன்

# தனியார்மயமாகும் கல்வி புதிய மனுதர்மம் — ⑤

★ ப. சிவக்குமார்

உலகமயமாதலின் விளைவாகவும் தனியார்மயம் மற்றும் தாராளமயத் தாக்குதலினாலும். பல்வேறு துறைகளில் ஏற்படும் பாதிப்புக்களையும், குறிப்பாக, கல்வித் துறையில் வளரும் நாடுகளும் வறிய நாடுகளும் செய்கின்ற கட்டுமானச் சீரமைப்பையும், கடனுக்கான வட்டி செலுத்துவதே பிரதானமாகி விட்ட நிலையையும் கண்டோம்.

இந்த உலகமயமான சூழலில் பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் மூலதனம் கல்விக் கொள்கைகளைச் சீரமைப்பதில் அதிவேக மாற்றங்களைக் கொண்டுவருகின்றன என்பதை நாம் உணரவேண்டும். இப்போதுள்ள தொழில் நிறுவனங்களில் கணினிமய மற்றும் எலெக்ட்ரானிக் ஆட்சிமய (e-Governance) ஆளுகைக்குட்பட்டு கருவிகளும் நிர்வாக அமைப்புகளும் துரிதமாக மாற்றப்பட்டுவிட்டன.

மேலும் ஒரு பன்னாட்டுத் தொழில் நிறுவனம் வளரும் நாட்டில் குறிப்பிட்டுக் கூறும்படியான ஒரு துறையை மட்டுமே தன்னுடைய உற்பத்தி வளர்ச்சியிலும், வியாபாரத் துறையிலும் ஈடுபடுத்திக் கொள்வதில்லை. எடுத்துக்காட்டாக ஹிந்துஸ்தான் லீவர் என்றால் 'ஹமாம்' சோப் என்பது மட்டுமல்ல, மாடர்ன் ரொட்டி, புரூகாபி முதல், லிப்டன் டீவரை பல்வேறு தரப்பட்ட உற்பத்தியின் மூலாதாரமான முதலீடுகளைக் கைப்பற்றித் தன் ஆதிக்கக் கரத்தை விரிக்கும் நேரத்தில் அந்த நிறுவனம் தேயிலைத் தோட்டம் முதல், சோப்புக்கான மூலாதாரப் பொருள் உற்பத்தி செய்யும் பெட்ரோல் வேதியியல் தொழிற்சாலைவரை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

ரிலையன்ஸ் என்றால் பெட்ரோல் முதல் செல்போன் வரை என்றாகிவிட்டது. இந்த ரிலையன்சின் அம்பானியையும் பிர்லாவையும்தான் உயர்கல்விக்கான கொள்கைத் தயாரிப்பில் பாஜக அரசு ஈடுபடுத்தியது கவனிக்கத்தக்கது. இவர்கள் தனியார் பல்கலைக்கழகங்



படிப்பகம்

www.padippakam.com

**பன்னாட்டு மருந்துக் கம்பெனி ஆராய்ச்சியும் இன்றைய உயர்கல்விப் படிப்பும் எப்படியோ அப்படித்தான் கார்கில் விதைக் கம்பெனியும் பயோ டெக்னாலஜி (Biotechnology) சார்ந்த விவசாயப் படிப்பும்.**



**'இட ஒதுக்கீடாவது - வெங்காயமாவது' - சுயநிதிக் கல்லூரி கொள்ளையர்களின் சார்பாக ஜேப்பியார்.**

களைத் திறக்கவும் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கோத்ரெஜ், ஆதித்யா, மோடி ஆகிய நிறுவனங்களும் உயர்கல்வித்துறையில் நுழைந்துவிட்டன. இத்தகைய பன்னாட்டு நிறுவனங்களும், உள்நாட்டுத்தரகர்களும் உலகநாடுகளின் பல்வேறு கொள்கைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துவதும் உலகவர்த்தகக் கழக (WTO) நுழைவுக்குப் பின் எளிதாக சாத்தியமாகி விட்டது.

உலக வங்கி (WB), அனைத்து நாடுகளின் நிதி நிறுவனம் (International Finance Corporation IFC), பல்முனை முதலீடு உத்தரவாத நிறுவனம் (Multilateral Investment Guarentor Agency - MIGA) ஆகியவை இணைந்து "Ed Invest" (கல்விக்கு முதலீடு) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. உருகுவே வட்டப் பேச்சுக்குப் பின் உலகவர்த்தகக் கழக உருவாக்கத்தின் போது 1990–களிலேயே சேவைத்துறையான (Service Sector) கல்வித்துறை, வணிகமென அறிவிக்கப் பட்டது. இந்த அறிவிப்புக்குப் பின் இந்தியா உட்படப் பல நாடுகளில் உயர் கல்வித் துறையில் தனியார் மயத்துக்கான விரிவாக்கத்தை அமலாக்க "Ed Invest" அமைப்பு உதவத் தொடங்கியது. WTO ஒப்பந்தப்படி 2005–முதல் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் நேரடியாகக் கிளைகளைத் தாராளமாகத் தொடங்க இந்தியா அனுமதிக்க வேண்டும்.

தற்போதே பல வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் இந்தியாவில் உள்ள பல நிறுவனங்களுடன் ஒப்பந்தமிட்டுக்கொண்டு பட்டம் வழங்கத் தொடங்கிவிட்டன. "இந்திய நிர்வாக அறிவியல் நிறுவனத்துடன் (Indian Institute of Management Science) போட்டி போடும் வகையில் அமெரிக்காவில் உள்ள கெல்லாக் மற்றும் வார்ட்டன் (Kellog & Warton) நிறுவனத்துடனும் இங்கிலாந்தில் உள்ள லண்டன் வர்த்தகப் பள்ளியுடனும் ஒப்பந்தமிட்டுக் கொண்டு ஹைதராபாத்தில் உள்ள இந்திய வர்த்தகப் பள்ளி (Indian School of Business) எம்பிஏ பட்டம் வழங்க முனைந்துள்ளது. NITT நிறுவனம் அமெரிக்காவில் உள்ள IIT கல்வி சேவை அமைப்புடனும், டாட்டா இன்ஃபோடெக் இங்கிலாந்து ஹெர்ட்போஃர்டு பல்கலைக் கழகத்துடனும் மென்பொருள் பட்டப்படிப்புக்காக ஒப்பந்தமிட்டுக் கொண்டுள்ளன (நன்றி: "இந்தியா டுடே".)

கல்வி "சேவைத்துறை அன்று, வர்த்தகமென்ற" அறிவிப்பு 90–களில் வருவதற்கு முன்பே 1986 புதிய கல்விக் கொள்கையின் ஆரம்பத்திலிருந்தே மூலதனமகற்றலை (disinvestment) மத்திய மாநில அரசுகள் தொடங்கி விட்டன. இந்த மூலதனம் அகற்றல் உயர்கல்வியில் நிகழ்த்துவது தொடக்கக் கல்வியில் அரசின் முதலீட்டை அதிகரிக்கவே என்பது போலியான வாதம். கல்வி வியாபாரக் கடைகளைத் திறக்க வெளிநாடுகள் நிர்ப்பந்திப்பதன் காரணம், கல்விவர்த்தகத்தில் ஈடுபடும் லாபமே என்பதைப் பின்வரும் விவரங்கள் விளக்கும்.

ஆஸ்திரேலியாவின் ஏற்றுமதி வர்த்தகத்தில் மிகப் பெரிய பங்கை "கல்வி ஏற்றுமதி" வகிக்கிறது. 1998–ஆம் ஆண்டில் மட்டும், ஆஸ்திரேலியாவில் தங்கிப் படிக்கும் 46,000 வெளிநாட்டுமாணவர்கள் மூலமாக ஆஸ்திரேலியாவுக்கு 300 கோடி டாலர்கள் வருமானம் கிடைத்துள்ளது. தற்போது ஆஸ்திரேலியா அரசு தமது நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களின் வருமானத்தைப் பெருக்க செயற்கைக்கோள், இணையதளம், கணினி மூலமாக வெளிநாட்டு ஆசிய மாணவர்களை இலக்காக வைத்து செயற்கைக் கோள் வளாகங்களை (Satellite Campus) உருவாக்கிவிட்டது. அமெரிக்காவில் ஒவ்வோர் ஆண்டும் 5 லட்சம் வெளிநாட்டு மாணவர்கள் கல்லூரிகளில் தங்கிப் படிக்கிறார்கள். இவர்களால் அமெரிக்காவுக்கு நூறு கோடி டாலர்கள் வருமானம் கிடைக்கிறது.

தற்போது கணினி, தகவல் தொழில் நுட்பம், நிர்வாக மேலாண்மை ஆகிய துறைகளில் வெளிநாட்டு மாணவர்களுக்கு அவர்கள் தாய்நாட்டிலேயே செயற்கைக்கோள், இணையதளம் மூலமாக e-படிப்பு (electronic learning) வழங்கும் மாய பல்கலைக்கழகங்களைத் (Virtual University) தொடங்க ஏற்பாடுகள் நடந்து விட்டன. தற்போது உலகில் உயர் கல்வி மற்றும் e-கல்வி மூலம் 115 நாடுகளில் அமெரிக்காவின் ஆதிக்கம் உள்ளது. அமெரிக்காவிற்கு உலகளாவிய e-படிப்பு வர்த்தகம் மூலமாக 2001-ல் மட்டும் 630 கோடி டாலர்கள் வருமானம் கிடைத்துள்ளது. இந்த வருமானம் 2004-ல் 2300 கோடி டாலர்கள் என உயரக் கூடிய வாய்ப்பு உள்ளது. இனி உலகம் முழுவதும் செயற்கைக் கோள் வழி நடக்கக் கூடிய மாய பல்கலைக் கழகங்கள்தான் செயல்படப் போகின்றன.

ரசியாவில் மருத்துவப் படிப்புக்காக ஆயிரக்கணக்கில் இந்திய மாணவர்கள், குறிப்பாக, தமிழ்நாட்டு மாணவர்கள், (வசதிபடைத்த) செல்வதும் இவர்கள் தமிழ்நாட்டு ராமச்சந்திரா மற்றும் அண்ணாமலை சுயநிதிக் கொள்ளை வியாபார 25 லட்ச விலையைக் காட்டிலும் சில லட்சம் குறைவான விலைக்கு எம்.பி.பி.எஸ். படிப்பு கிடைக்கிறது எனக்கூறுவதும் எதைக்காட்டுகிறது? உலகமயமாதலின் காரணமாக உலக வர்த்தகக் கழக வரவுக்குப் பின் "உயர் கல்வி என்பது வணிகப் பொருளாக (commercial product) மாறி விட்டது என்பதையே காட்டுகிறது. எனவே, வணிகச் சக்திகளின் போட்டியும் ஆதிக்கமுமே இனி உயர்கல்வித் துறையில் நிலைக்கும். இதற்குத் துணைபுரியும் வகையில்தான் அரசின் கல்விக் கொள்கைகளும் நீதித் துறையும் இருந்தாக வேண்டும்.

அண்மையில் வெளியான உச்ச நீதி மன்றத் தீர்ப்புக்குப் பின் ஜேப்பியார் தலைமையில் கூடிய உயர் கல்வி வியாபாரிகள், தமிழ்நாடு அரசின் கல்வித் துறை மற்றும் அண்ணாபல்கலைக் கழகத்தைச் சவாலுக்கு இழுப்பதைக் காண்கிறோம். "இட ஒதுக்கீடு கிடையாது! ஒற்றைச் சாளர மாணவர் சேர்க்கை முறை எங்களுக்குத் தேவையில்லை. நாங்களே எங்கள் மாணவர் சேர்க்கையைப் பார்த்துக் கொள்கிறோம்," எனக் கூறுவதைச் சாதாரணமாக மாற்றிவிட முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

உலக மயமாதலின் ஊற்றுக்களான கல்வி வியாபாரம், தனியார் மயம் இதை ஒட்டுமொத்தமாகத் தகர்க்காமல் இந்த வியாபரிகளிடம் இட ஒதுக்கீடு, சமூகநீதி கேட்டு நிர்ப்பந்திப்பது என்பது சாத்தியமே இல்லை. உலகமயமாதலின் காரணமாகக் கல்வி, சுகாதாரம் போன்ற சேவைத் துறைகள் வணிகமயமாகிப் போனதால் விளிம்புநிலையில் உள்ள மக்கள் மேலும் விளிம்புநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். விவசாயம், தொழில் துறை போன்றவை நலிந்ததற்கும், அரசுத் துறை, பொதுத் துறை ஒழிக்கப்படுவதற்கும் இந்த உலக வர்த்தகக் கழக நிபந்தனைகளின் அமலாக்கமே காரணம் என்பதை உணர்ந்து ஒட்டுமொத்த மக்கள் போராட்டத்துக்கான அணி சேர்க்கையுடன் அரசியல் மாற்றத்துக்கான போராட்டம் இல்லாமல் தனித்த கல்லூரி ஆசிரியர் போராட்டம் மட்டும் உயர்கல்வி வியாபாரத்தைத் தடுக்க முடியாது.

சுயநிதிக் கல்லூரிவியாபாரிகளைத் தோலுரிக்காமல், உலக வர்த்தக நிபந்தனைப்படி கல்விக் கொள்கை, வேலை வாய்ப்பு நிர்ணயிக்கப்படுவதை எதிர்க்காமல் இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதியைக் காக்க முடியும் என்று ஆலோசனை செய்யும் பா.ம.க போன்ற கட்சிகள் எதைச் சாதிக்க முடியும்?

தனியார்மயம் தாராளமயம் உலகமயம் கல்வித் துறையில் ஏற்படுத்தியுள்ள அதிரடி மாற்றங்கள் வெறும் வணிக ரீதியான லாப நோக்குடனான மாற்றங்கள் மட்டுமல்ல. கருத்தியல் ரீதியாக ஓர் ஒடுக்குமுறையை மிக எளிமையாக அமெரிக்க ஏகாதிபத்தியமும் பிற 48 நாடுகளும் வளரும் நாட்டு மக்கள் மேல் செலுத்துவதற்கான வழி என்றும் பார்க்க வேண்டும். அடிப்படை அறிவியலும், வரலாறும், பொருளாதாரமும் முழுவதுமே அகற்றப்பட்டு சந்தைப் பொருளாக தகவல் தொழில் நுட்ப அறிவு (Knowledge) மட்டுமே வேண்டும் என்று கூறப்படும் போது என்ன நிகழும்? தகவல் தொழில் நுட்பப் பெரு வளர்ச்சியில் நுகர்வோர் சந்தையைப் பெருக்கும் முயற்சியை மட்டுமே லாபநோக்குடன் வளர்ந்த நாடுகள் மேற்கொள்ளுதலும் அதை அரசியல் ரீதியாக எதிர்த்து மக்களைத் திரட்டக் கூடிய கருத்தியல் மாற்றங்கள் பின்னுக்குப் போதலும் நிகழும்.

பல ஆண்டுகளாகவே நிகழ்ந்த பாடத் திட்ட மாற்றங்கள் இதைத் தீர்மானிப்பதில் முன்னுக்கு நின்றுள்ளன. M.B.B.S. படிப்பில் ஆங்கிலமும், இயற்பியலும், வேதியியலும் நீக்கப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. பொறியியல் பட்டப்படிப்பில் ஆங்கிலம் நீக்கப்பட்டுப் பல ஆண்டுகளாகிவிட்டன. இரண்டாண்டுகள் இயற்பியலும் வேதியியலும் படித்தது போக, ஒரு பருவத்துடன் முடிகின்ற கதை தற்போது பொறியியல் பாடத்திட்டத்தில் உள்ளது. அதையும் நீக்குவதற்கு முயற்சிகள் நிகழ்கின்றன.

மருத்துவரோ, பொறியாளரோ இலக்கியமும் அடிப்படை அறிவியலும் படிக்கும் வாய்ப்பை இழந்து, செயல் முறைசார்ந்த படிப்புகளை மட்டுமே படிக்கும்போது சமூக உணர்வற்ற, அடிப்படை மாற்றங்களை அறிவியலில் உருவாக்கும் சிந்தனை இல்லாத தொழில் நுணுக்கம் மட்டுமே தெரிந்த எந்திரங்களாக உற்பத்தி செய்யப்படுகின்றனர். ஓரளவுக்குக் கலை அறிவியல் கல்லூரிகளில் உள்ள சமூகவியல் சார்ந்த அடிப்படைகளும் அகற்றப்பட்டு வேலை வாய்ப்பு சார்ந்த பாடங்கள் (Job oriented courses) என்ற பெயரில் அவ்வப்போது பாடங்கள் புகுத்தப்படுகின்றன. தொழில் முனைவோர் தேவைக்கேற்ப கல்வியாபாரிகளும் கல்வித்துறை நிபுணர்களும் கூட்டாக இதை அரங்கேற்றி வருகின்றனர்.




எம்.சி.ஏ., நுண் உயிரியல் (Microbiology) உயிரிதகவல் தொழில் நுட்பம் (Bio-Information) போன்ற பாடங்கள் இன்று வியாபாரமாகின்றன. கணினி மென் பொருள் வியாபாரம் மந்தமானதால் எம்.சி.ஏ. விலையும் கணிப் பொறியின் விலையும் குறைந்து விட்டது. ஆனால் உயிரியல், இயற்பியல், வேதியியல் மற்றும் கணித அறிவோடு கணினி பயன்பாட்டுடன் மருந்துகளின் பயன்பாட்டைப் பற்றிய ஆராய்ச்சியில் Bio Informatics பெரிதும் துணைபுரிகிறது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மருந்தை உடலில் செலுத்தி நோயாளியின் அறிவுக்கு எட்டாமலேயே ஆராய்வது எளிமை என்பதால் புற்றுநோய் மற்றும் மனநல மருத்துவம் சார்ந்த மருந்துகள் பற்றிய ஆராய்ச்சியைப் பன்னாட்டு நிறுவனங்கள் தொடங்கிவிட்டன.

பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் (IISC) பணியாற்றிய மூன்று விஞ்ஞானிகள் வேலையை ராஜினாமா செய்துவிட்டு Bio informatics நிறுவனத்தைத் தொடங்கியுள்ளனர். ஃபிசர் (Pfizer), விம்டாலேப், சிரோகிளின் பார்ம், ரெட்டிஸ் லேப் ஆகிய மருந்துக் கம்பெனிகள் இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளன. Bioinformatics படிப்பைக் கல்வி வியாபாரிகள் சுயநிதிக் கல்லூரியில் தொடங்கி இருப்பது ஏன் என்று புரிகிறதா?

பன்னாட்டு மருந்துக் கம்பெனி ஆராய்ச்சியும் இன்றைய உயர்கல்விப் படிப்பும் எப்படியோ அப்படித்தான்

**இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மருந்தை உடலில் செலுத்தி நோயாளியின் அறிவுக்கு எட்டாமலேயே ஆராய்வது எளிமை என்பதால் புற்றுநோய் மற்றும் மனநல மருத்துவம் சார்ந்த மருந்துகள் பற்றிய ஆராய்ச்சியைப் பன்னாட்டு நிறுவனங்கள் தொடங்கி விட்டன.**


படிப்பகம்

www.padippakam.com

கார்கில் விதைக் கம்பெனியும் பயோ டெக்னாலஜி (Biotechnology) சார்ந்த விவ சாயப் படிப்பும். எனவே பன்னாட்டு நிறு வனங்கள் கல்விவியாபாரிகள் உலக வர்த்தகக் கழகம் இவற்றின் கூட்டுக் கள வாணித்தனம் அம்பலமாகவில்லையா?

உயிரி தொழில் நுட்ப ஆய்வுக்கு இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள் தகுந்த களமாக அமைந்துள்ளது ஏன்? மர பணு (Gene), மரபுவழி நோய்கள் பற்றி ஆராயவிரும்புகின்ற விஞ்ஞானிகளுக்கு சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட இந்தியச் சமூகத்தில் உள்ள மரபணுத் தன்மை பற்றி ஒரு விஞ்ஞானி கூறுவதைப் பார்ப்போம். இந்தியாவில் சாதிய அமைப்பினால் தனி மைப்படுத்தப்பட்டிருப்பதின் காரணமாக ஆதிவாசிகள், பொதுவாக இந்தியர்கள் நன்றாகப் பாதுகாக்கப்பட்ட மற்றும் எளி மையாகக் கண்டுபிடிக்கக் கூடிய மரபணு உடையவர்களாக இருக்கிறார்கள், எனவே மரபு வழி நோய்களின் பின்னணி பற்றி ஆராயும் விஞ்ஞானிகளுக்கு நிறைய தகவல்கள் திரட்ட இவர்கள் பயன்படுவார்கள் (நன்றி: Business World). ஆகவே, பயோடெக்னாலஜி மற்றும் மரபணு ஆய்வு நோய்கள் பற்றிய ஆய்வை பல மருந்துக் கம்பெனிகளும் விஞ்ஞானிகளும் இந்தியாவில் நடத்தி வருகின்றனர்.

ஆந்திராவில் உள்ள வரப்பிரசாத ரெட்டியின் சாந்தா உயிரிதொழில் நுட்ப நிறுவனம் ஹெப்பட்டைடிஸ்-பி மஞ்சள் காமாலை தடுப்பு ஊசி ஆய்வும் புற்று நோய்க்கான மருந்து பற்றிய ஆய்வும் நடத்துகின்ற நிறுவனமாகும். இந்தத் துறைக்குப் பயன்படக் கூடிய பட்டப் படிப்பு, இந்த உயிரி தொழில் நுட்ப ஆய்வு ''புதிய உலகமயத்தின் வரவு'' எனக் கருதப்படுகிறது. எனவே இதற் கான வேலைக்கு உயிரிதொழில் நுட்ப (பயோடெக்னாலஜி) பட்டதாரிகள் மற்றும் உயிரிதகவல் தொழில் நுட்ப (பயோ இன் ஃபர்மேட்டிக்ஸ்) பட்டதா ரிகள் தேவைப்படுகின்றனர். எனவே நல்ல விலைக்கு ஏலம் விடப்படும் பட்ட மாக கல்வி வியாபரச் சந்தையில் இவை பேரம் பேசப்படுகின்றன. உலக வர்த்தகக் கழக நிபந்தனைகளுக்குப் பின் இது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமாகிவிட் டது.

இந்தக் கல்வி வியாபார நிர்பந்தங் களைப் பற்றி நமது துணைவேந்தர்கள் மூச்சுவிடுவதில்லை. மாறாக வெண்சா மரம் வீசி வரவேற்கின்றனர். மொரே சியஸ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கூலம் மொஹெமத் பாய் (Goolam Mohamed Bhai) ''உலகமயமாதல் – பல்கலைக் கழகங்களுக்குக் காத்திருக்கும் சிக்கல்கள் யாவை?'' என்னும் தலைப்பில் கனடாவில் 2002, செப்டம்பரில் நடை பெற்ற உலகளாவிய கருத்தரங்கில் பேசிய கருத்துகள் குறிப்பிடத்தக்கவை:

**நல்ல விலைக்கு ஏலம் விடப்படும் பட்டமாக கல்வி வியாபரச் சந்தையில் இவை பேரம் பேசப்படுகின்றன. உலக வர்த்தகக் கழக நிபந்தனைகளுக்குப் பின் இது அங்கிகரிக்கப்பட்ட வியாபாரமாகிவிட்டது.**

''பல்கலைக் கழகங்கள் இயற்கையா கவே தங்கள் நோக்கில் உலகளாவிய பார்வையுடனே இருக்கின்றன. வளரும் நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் உலக அமைப்பின் ஓர் அங்கமாகவே தங்களைக் கருதிவந்துள்ளன. முந்தைய காலனிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் மேலைநாட்டுப் பல்கலைக் கழ கத்தின் பதிப்பாகவே உள்ளன... இவை பல் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்க ளுடன் ஒப்பந்தங்களுடனும் பரிமாற்றத் திட்டங்களுடனும் முன்னரே செயல்பட்டு வருகின்றன. இவை எல்லாம் உயர்கல் வியின் உலகளாவிய தன்மையாகும். இதை உலகமயமாதல் எனக் கருத முடி யாது.

''தற்போது உலக வர்த்தகக் கழகம் (WTO) கல்விச் சேவையில் வியாபா ரத்தைத் தாராளமயமாக்க காட் ஒப்பந்தம் மூலம் முடிவெடுத்துள்ளது. உலகமய மாதல் காரணமாகத் தற்போது கல்வி வணிகப் பொருளாகக் கருதப்பட்டு விட்டது. தவிர்க்க முடியாமல் வியாபார சக்திகளின் ஆளுகைக்குக் கல்வி உட்பட்டுவிட்டது. உயர்கல்வியை முழு வதும் தாராளமயமாக்குவதின் அபாயங் களின் வீச்சையும், வளரும் நாடுகளின் உயர்கல்வி அமைப்பின் மீது ஏற்படும் எதிர்விளைவுகளையும் உலகில் யாவரும் தெரிந்து கொண்டனர். வளர்ந்த நாடு களில் உள்ள முக்கியமான கல்வியா ளர்கள் காட் ஒப்பந்தத்தின் கீழ் கல்வி கொண்டு வரப்படுவதற்கு எதிர்ப்பு தெரி வித்துள்ளது நிறைவாக உள்ளது. கன டாவின் கல்லூரி மற்றும் பல்கலைக் கழ கங்களின் சங்கம், (Association of Universities and Colleges of Canada), கல்விக்கான அமெரிக்கக்குழு (American Council on Education), ஐரோப்பிய பல்கலைக்கழகச் சங்கம் மற்றும் உயர் கல்வி தரப்படுத்தும் குழு ஆகிய அமைப் புக்களும் (இந்த அமைப்புகளில் வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவைச் சார்ந்த 3,500 நிறுவனங்கள் அடங்கும்) காட் ஒப்பந்தத்தின் கீழ் கல்வி கொண்டு வரப்பட்டதற்கு அதிருப்தி தெரிவித்துள் ளனர்.''

வளரும் நாடுகளில் உலகவர்த்தகக் கழகம் மற்றும் காட் ஒப்பந்தத்தால் கல்வி வியாபாரமாவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மொரேசியஸ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தெரிவித்த கருத்துக்கள் இங்கே உள்ள முதுகெலும்பற்ற துணைவேந்தர்க ளுக்குச் சமர்ப்பணம்.

இத்தகைய சூழலில் தான் அண்மையில் ***தினமணி***யில் வெளியான செய்தியில் மாநில அரசுகள் உயர்கல்விக் கட்டணத்தை ஏற்ற ஒப்புக் கொண்டதும், உச்சநீதி மன்றத் தீர்ப்பையும், ஜேப்பியார் தலைமையிலான சுயநிதிக் கல்லூரி நிர்வா கங்கள் விடும் சவாலையும் பார்க்க வேண்டும்.

விவசாயம், மின்சாரம், உடல்நலம், கல்வி, தொழிற் துறை, ரயில்வே, போக்கு வரத்து, பொதுத்துறை, எல்ஐசி, வங்கி என பல்வேறு துறைகளும் உலக வங்கியின் பல்வேறு நிபந்தனைகள், கட்ட ளைகள் ஆகியவற்றுக்குக் கீழ்ப்படிந்தது போக இன்று இவை அனைத்துமே கட்டு மானச் சீரமைப்புக்கு வேகமாக ஆட்படுத் தப்பட்டு அடித்தட்டு மக்களின் நலனைப் புறந்தள்ளிச் செயல்படும் நிலைக்கு வந்து விட்டன.

இந்நிலையில் ஓய்வு பெறும் வயது ஐம்பத்தாறா அல்லது ஐம்பத்தெட்டா? ஓய்வூதியப் பலன்கள் பணமாக வருமா? பத்திரமாக வருமா? எதிர்கால ஓய்வூ தியம் கானல் நீரா? பல்கலைக் கழகத் தோடு கல்லூரி இணைத்துவிட்டதால் பாதுகாப்புண்டா? — என தனித்தனி யாகப் பிரச்சனைகளைப் பார்ப்பதும் தனக்குப் பிரச்சனை என்று வரும் போது மட்டும் போராடுவது என்பதும் ஆசிரியர் ஊழியர் சங்கங்களின் போக்காக இருப் பதால்தான் போராட்டங்கள் பின்ன டைவை நோக்கிச் செல்கின்றன. கூடுதலாக, சில தலைமைகளின் அடிவரு டித்தனம் வேறு!

கல்வியில் உலகமயமாதலையும் காவிமயமாதலையும் ஒரு சேர எதிர்க்கத் தவறினால் வருங்காலத்தில் பாசிச மத வெறி நோக்குடைய வசதி படைத்த உயர் சாதிக் கும்பலை உருவாக்குகின்ற அரசு களின் புதியமனுதர்மக் கொள்கைக்குத் துணை போனதாகிவிடும்.

(முற்றும்)


படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன பயங்கரவாதத்தின் இரத்த சாட்சியங்கள்

**இந்துத்துவம் ஒரு வாழ்க்கை முறையென்றும், இமயம் முதல் குமரி வரை இந்திய மக்களை ஒன்றிணைக்கும் கலாச்சாரமென் றும் கூறுகிறது ஆர்.எஸ்.எஸ். கும்பல். பாரதக் கலாச்சாரமென்று ஆர்.எஸ்.எஸ். கும்பலால் அழைக்கப் படும் பார்ப்பன பயங்கரவாதம், இமயம் முதல் குமரி வரை எண்ணிட லங்கா மக்களைப் பலி கொண்டிருக் கிறது.**

**அவர்களில் சிலர் உங்கள் முன் பேசுகிறார்கள்.**

## குஜராத்

கொலைகாரன் மோடியின் தலைமை யிலான பாரதிய ஜனதா அரசு சென்ற ஆண்டு நடத்திய இனப்படு கொலையில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட முசுலீம் கள் கொல்லப்பட்டனர். ஜாலியன் வாலா பாக் படுகொலையைப் போல நாற்புற மும் சுற்றி வளைத்து எரித்துக் கொல்லப் பட்ட நரோடா பாட்டியா எனும் அகமதா பாத் நகரக் குடியிருப்பிலிருந்து தப்பிப் பிழைத்த முசுலீம் மக்களின் வாக்குமூலம்.

## அரியானா - துலேனா

மாட்டின் தோலை உரித்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட5 தலித்துகளை விசுவ இந்து பரிசத்தின் குண்டர்களும் போலீசும் சேர்ந்து பட்டப்பகலில் வெட்டிக் கொலை செய்தனர்.

இந்த மனுதர்ம பயங்கரவாதத்திற்குத் தம் மக்களைப் பலிகொடுத்த பெற்றோர் உங்களிடம் நீதி கேட்கிறார்கள்.

## திண்ணியம்

மனுநீதியை விஞ்சும் கொடிய தண்டனை உண்டா? உண்டு. மனித மலத்தை மனிதன் வாயில் திணித்த கொடுமை அது. லஞ்சக் காசை நக்கி வயிறு வளர்க்கும் 'ஜாதி' நாயை அம்பலப்படுத்திய சுயமரியாதையுள்ள தலித் ஒருவருக்கு இழைக்கப்பட்ட கொடுமை அது. அந்தச் சுயமரியாதை யுள்ள 'குற்றவாளி' பேசுகிறார்.

## மீனாட்சிபுரம்

1981-இல் 1000 தலித் மக்கள் இசுலாமுக்கு மதம் மாறியபோது, ஆர்.எஸ்.எஸ். அலறித் துடித்தது. உடனே மீனாட்சிபுரத்திற்கு வந்திறங்கி னார் வாஜ்பாயி.

இருபதாண்டுகள் கழிந்து விட்டன. மீனாட்சிபுரம் மக்கள் இப்போது சொல்வார்கள், அவர்கள் மதம் மாறியது சொகுசைத் தேடியா, சொர்க்கத்தை தேடியா, சுயமரியா தையைத் தேடியா என்ற உண்மையை!

## கூத்திரம்பாக்கம்

அரசாங்கத்தையே ஆட்டி வைக்கும் சங்கராச்சாரிக்கு அடிபணிய மறுத்தன 60 தலித் குடும்பங்கள். ''நாங்கள் வழிபட முடியாத கடவுள் எங்களுக்குத் தேவை இல்லை. மதம் மாறுகிறோம்'' என்று அறிவித்தார்கள்.
முகத்திரை கிழித்த முன்னணியாளர்கள் பேசுகிறார்கள்.

## வைக்கம் - கேரளா

1930-களில் திருவிதாங்கூர் சமஸ் தானத்தின் கீழிருந்த வைக்கம் நகரின் வீதிகளில் நடப்பதற்குக் கூட தாழ்த்தப் பட்ட, ஈழவச் சமுதாய மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. போராட் டத்தில் பெரியாருடன் இணைந்து நின்று போராடிய பெரியவர் விசுவநாதன் (வயது 85) அந்தச் சாதியக் கொடுங் கோன்மையை நினைவு கூர்வார்.

## குமரி மாவட்டம்:

***மனுதர்மக் கொடுங்கோன்மைக்கு எதிராக மாராப்புப் போராட்டம், ஐயா வைகுந்தர் வழிபாடு.***

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழிருந்த குமரி மாவட்டத்தில் ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் நடந்த கொடுமை இது. சாணார் (நாடார்) சமூகத்துப் பெண்கள் மார்பை மறைக்கக் கூடாது என்பது அன்று அரசாங்கச் சட்டம்.

இந்த ஒடுக்குமுறையை எதிர்த்து மதம் மாறிய கிறித்தவர்களின் வாரிசுகளும், பார்ப்பனப் பிடியிலிருந்து வெளியேறி புதிய வழிபாட்டு முறையை உருவாக் கிய ஐயா வைகுந்தர் வழிபாட்டுப் பிரிவினரும் கடந்த காலத்தை விளக்குவார்கள் - நிகழ்கால அபாயத்தை நாம் புரிந்து கொள்வதற்கு.

**அணிதிரண்டு வாரீர்!**
**ஆதரவு தாரீர்!**

**தொடர்புக்கு**
**தோழர் காளியப்பன்,**
***1, அண்ணாநகர், சிவாஜி நகர் வழி***
***தஞ்சாவூர் - 613 001.***
***தொலைபேசி - 04362 - 232922***

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே, தவிர்க்க இயலாத காரணத்தால் டிசம்பர், சனவரி இதழ்கள் வெளிவரவில்லை. இந்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

*தஞ்சை மாநாட்டு புதிய கலாச்சாரம் அரங்கில்...*

எமது நூல்கள், பேச்சு மற்றும் பாடல் ஒலிப்பேழைகள், ஒளிக் குறுந் தகடுகள் (VCD) போன்றவை விற்பனைக்கு கிடைக்கும்.

*புதிய வெளியீடுகள்*

மதமாற்றத் தடைச் சட்டம் ஏன்?
- வழக். பானுமதியின்
திருச்சி கருத்தரங்க உரை
விலை: ரூ. 30.00

தமிழ் மக்கள் இசை விழா
9ஆம் ஆண்டு ஒளிக்குறுந்தகடு
விலை: ரூ.100.00

*குறிப்பு:* மாநாட்டில் மட்டும் அனைத்து பேச்சு ஒலிப்பேழைகளுக்கும் ரூ. 5 வீதம் கழிவு தரப்படும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!
படிப்பகம்

(TAMIL MONTHLY) FOR INDIA UNDER No: 42647/87 Regd. No: TN/Chief PMG - 303 / 2002
www.padippakam.com

# சுதந்திரம்.... இன்னும் தொலைவில் இல்லை.

பொய்களின் கைபிடித்து
நெடுந்தொலைவு
வந்துவிட்டோம்.

ஒவ்வொரு மைல்கல்லிலும்
சுமைகளென
நம் செல்வங்கள்
அனைத்தையும்
இறக்கி வைத்துவிட்டோம்.

இலவசமாய்க் கிடைத்ததென
பல வண்ணப் பந்தல்களில்
நிறைய மூடநம்பிக்கைகளை வாங்கி
வயிறு முட்டக் குடித்துவிட்டோம்.

பொய்கள்
கொழுத்துப் போய்விட்டன.
நாம் நிறைய
இளைத்துப் போய்விட்டோம்.

பொய்கள் அழைத்துச் செல்வது
மகிழ்ச்சியின் தேசத்திற்கு அல்ல
மரணக் குழிக்குத்தான்
உண்மை எச்சரித்துக்கொண்டே
உடன் வருகிறது.

பொய்கள் இதுவரை
உண்மையின் ஆடைகளை
உடுத்தியிருந்தன.

இப்பொழுது
தன் முகமூடிகள்,
உண்மையின் ஆடைகள்
எல்லாவற்றையும் களைந்தெறிந்து
தன்னை எவர் செயிக்க முடியும் என
கோரப்பற்களைக் காட்டி
எக்காளச் சிரிப்புடன்
உண்மையைப் பார்த்துக்
கேலி செய்கிறது.

சாவின் விளிம்பிற்கு
வந்துவிட்டோம்.
இப்பொழுதாவது
உண்மையின் கைப்பிடிப்போம்.
கரங்களை ஒன்றிணைப்போம்.

உற்றுப் பாருங்கள்
பொய்யின் முகத்தில் சவக்களை.

சுதந்திரம்... இன்னும்
தொலைவில் இல்லை.

**சாக்ரடீஸ்**



படிப்பகம்